Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 30 (25.11.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :56

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'

இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(சு-1771)

# தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள்

# தேசிய கொடியேற்றலுடன் இன்று ஆரம்பம்!

(கிளிநொச்சி)

**நாளை மறுதினம் அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழீழ மாவீரர் நாளுக்கு முன்னோடியாக- இன்று முதல் மாவீரர் எழுச்சி நாட்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளன. இன்று காலை 8 மணியளவில் மாவீரர் எழுச்சி நாட்கள் தொடர்பான நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.**

**மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8 மணிக்கு ஏற்றப்படும் தமிழீழத் தேசியக்கொடி நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று மாலை நிகழ்வுகள் நிறைவுற்றதும் இறக்கப்படும்.**

இயக்கப் பணிமனைகள், தளங்களிலும் பொதுநிறுவனங்கள் பாடசாலைகளிலும் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

இன்றுமுதல் 27 ஆம் திகதிவரை இடம் பெறும் அஞ்சலி நிகழ்வுகளில் - பொதுச் சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல் ஆகியன ஒழுங்கு முறையில் இடம் பெறும் என்று - தமிழீழ மாவீரர் - பணிமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் கிண்ணியாவில் இரு முஸ்லிம்கள் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் இனந்தெரியாதாவர்கள் இருவேறு இடங்களில் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு முஸ்லிம்கள் பலியானதுடன், ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

முதலாவது சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு பைசால் நகரிலும் அடுத்த சம்பவம் நேற்று அதிகாலை 2 மணிக்கு கச்சைக்கொடித் தீவிலும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிண்ணியா நகரத்திலிருந்து, மரக்கறிகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்தவர்கள் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றைய சம்பவம் சட்டவிரோத மதுபானம் விற்கும் வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடை (10 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தலைமை அதிகாரியாக சாந்த கொட்டேகொட பொறுப்பேற்பு!



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நேற்றுக்காலை இராணுவத் தலைமை அதிகாரியாக பதவியேற்றுக் கொண்டார்.

இராணுவத் தலைமையகத்தில் நடந்த நிகழ்வொன்றை அடுத்தே இவர் தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் இராணுவத் தளபதியும், கூட்டுப்படைத் தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவும் கலந்துகொண்டார்.

மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன இராணுவத் தலைமை அதிகாரி பதவியில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்து மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட கடந்த வெள்ளியன்று இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் அரச தரப்புப் பிரதிநிதிகளின் இராணுவ ஆலோசகராக இவர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சு தடைப்பட்டுள்ளதால் யுத்தம் வெடிக்குமென மக்கள் அச்சம்!

## நாடாளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் உரை

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டமையால், மக்கள் யுத்தம் நடைபெறுமா என்ற அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது, அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுள்ள சமாதானப் பேச்சுக்கள் ஜனாதிபதியின் நடவடிக்கையால் தடைப்பட்டுள்ளன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த காலத்தில் நடந்த யுத்தம் போன்று இனிமேலும் நடக்குமா என அச்சமடைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

வடபகுதி மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. அவர்கள் கடன்களைப்பெற்றே விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் செல்வம் அடைக்கலநாதன் குற்றம்சாட்டியுள்ளார்.

## இரண்டாயிரம் மாவீரர்களின் திருவுருவப் படங்களைக் கொண்ட

## சகல ஊடகங்களுக்குமான

## தேசியக் கொள்கையை அமைக்க

## இரண்டாயிரம் மாவீரர்களின் திருவுருவப் படங்களைக் கொண்ட

# மாவீரர்களின் நினைவாலயம் அம்பாறையில் திறந்துவைப்பு

அம்பாறை மாவட்டத்தில் இது வரை காலமும் வீரச்சாவடைந்த 2000 மாவீரர்களது உருவப்படங்கள் தாங்கிய நினைவாலயம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு அக்கரைப்பற்றிலுள்ள ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் நினைவாலயத்தை அம்பாறை மாவட்ட மாவீரர் காப்பக துணைப் பொறுப்பாளர் ஜனார்த்தனன் திறந்துவைத்தார்.

முன்னதாக - பொதுச்சுடரினை அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை மாவட்ட படையணிகளின் துணைக் கட்டளைத் தளபதி சச்சி மாஸ்ரர் எற்றிவைத்தார். அதன் பின்னர் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது. ஈகச் சுடரினை மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் குயிலின்பனும், மாவீரர் ஒருவரின் பெற்றோரும் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் போராளிகளோடு பெருமளவிலான பொதுமக்களும், அங்கு வைக்கப்பட்டிருந்த மாவீரரது திருவுருவப்படங்களைப் பார்வையிட்டனர். (07)

# இந்துசமய பேரவை செயலாளர் நீதிமன்றால் நேற்று விடுவிப்பு!

(யாழ்ப்பாணம்)

பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லமொன்றை நடத்தியமை மற்றும் அவ இல்லத்தைச்சேர்ந்த சிறார்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின்பேரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள வடபிராந்திய இந்து சமய பேரவையின் செயலாளர் சக்திகிரீவனை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று விடுவிக்க உத்தரவிட்டார்.

இந்துசமயப் பேரவையின் நிர்வாகத்தின்கீழ் கைதடிப் பகுதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அரச ஊடகங்களில் கட்சிப் பிரசாரம் இனி சூடு பறக்கப்போகுது பாருங்கோ.

## சகல ஊடகங்களுக்குமான

# தேசியக் கொள்கையை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்!

(கொழும்பு)

ஊடகங்களுக்கான தேசியக் கொள்கை ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு, ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசியக் கொள்கையை வகுப்பது தொடர்பாக ஆராய்வதற்கு, பல்கலைக்கழக பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடைமுறைகுறித்து, சகல அரசியற் கட்சிளுக்கும் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் நேற்று கடிதங்கள் அனுப்பிவைத்துள்ளார்.

இதன்பிரகாரம் - மாதம் தோறும் 15 நிமிடங்களுக்குக் குறையாமலும், 30 நிமிடங்களுக்கு மேற்படாமலும் ஒலி, ஒளிபரப்பு நேரம் ஒவ்வொரு அரசியற்கட்சிகளுக்கும் ஒதுக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இத்தாலி செல்ல முயன்ற 25 இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

இத்தாலிக்கு செல்வதற்கு தயாராக இருந்த 25 பேர் நேற்று நீர்கொழும்பில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீன்களை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றில் வைத்தே 19 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட இந்த 25 இளைஞர்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் - நீர்கொழும்பு, வெலிக்கடை, வென்னப்புவ பகுதியைச் சோந்தவர்கள் எனவும், பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது. இவர்களை - இத்தாலிக்கு ஏற்றிச் செல்லவிருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ஞர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# மாவீரர்தின இறுதிநாள் நிகழ்வில் அனைவரும் ஒன்றுதிரண்டு தமிழர் உணர்வுகளைச் சிங்கள தேசத்திற்கு உணர்த்துங்கள்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்தின இறுதிநாள் நிகழ்வில் அனைவரும் ஒன்றுதிரண்டு தமிழ்மக்களின் உணர்வுகளைச் சிங்கள தேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

வெளிநாட்டிலிருந்து வடக்கு - கிழக்குப் பிரதேசம்வரை தமிழர் என்ற அடிப்படையில் மலைபோன்ற சக்தியாக தமிழர்கள் நிமிர்ந்துநிற்கின்றார்கள்.

இந்த மண்ணில் ஒரு தமிழ்க் குடும்பம் இருக்கும்வரை - மாவீரரையும், அவர்களது தியாகத்தையும் அவர்களது பெற்றோரையும் போற்றுவோம். அவர்களைத் தமிழீழம் என்றும் போற்றும்.

இந்த அமைதியான சூழல் சிங்கள தேசத்திலிருந்து தமிழினத்தின் மீது வந்த பாசமான சூழல் அல்ல. காலங்காலமாக எமது மக்களை இராணுவரீதியாக அடக்கமுற்பட்டபோது, தியாகங்களைச் செய்து, எதிர்த்துப் நின்று போராடியதனால்தான் உருவானது. இதற்குக் காரணமானவர்கள் மாவீரர்கள்.

எமது இனத்தின்மீது காலங்காலமாகக் கொடூரங்களைச் சிங்கள இனம் திணித்ததன் காரணமாகவே நாம் போராடவேண்டிய தேவை ஏற்பட்டது. விடுதலைப் போராட்டம் இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. காலங்காலமாகத் தமிழ்த் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டுவந்தது.

1972 ஆம் ஆண்டே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன விளைவாகவே இலங்கை இராணுவம் எம்மை அடக்கநினைத்த அதே ஆயுதத்தினால் நாம் அவர்களை அடக்கி வைத்திருக்கிறோம்.

உண்மையில் இந்தச் சமாதானச் சூழலை ஏற்படுத்தியவர்கள் மாவீரர்கள். ஒவ்வொரு மாவீரர்களின் தியாகமும்- ஒவ்வொரு வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. மாவீரர்கள் என்பவர்கள் எமது காவல்தெய்வங்கள்.

தற்போது 17 ஆயிரத்து 703 மாவீரர்கள் எமது துயிலும் இல்லங்களில் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 19 துயிலும் இல்லங்கள் வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ளன. யாழ்ப்பாணத்தில் 4 துயிலும் இல்லங்கள் உள்ளன. எங்கள் மாவீரர்களின் கனவுகளை - அவர்கள பாதையில் நின்றே அடைய வேண்டும். இதுவே அவர்களது விருப்பம்.

தமிழரைப் பொறுத்தவரையில் மலைபோன்ற சக்தியாக உருவெடுத்து இருக்கின்றோம். ஆனால், மாவீரர் தினத்தினைக் கொண்டாடுவதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

ஆயுதம் இல்லாது நிராயுதபாணியாக உள்ள எம்முடன், மாவீரர் தினச் செயற்பாட்டில் ஈடுபட்டு இருக்கின்றபோதே இவ்வாறான தகாத செயல்களில் படையினர் ஈடுபடுகின்றனர். உண்மையில் இவ்விடயத்திற்குக் காலம் பதில் சொல்லும்.

இறுதி நாள் மாவீரர் நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும். தமிழ்மக்கள் தமது உணர்வைச சிங்கள தேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். தென்னிலங்கையில் நடைபெறும் அரசியல் போர்பற்றி அனைவரும் அறிந்துள்ளனர். அந்த வகையில் தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகளின் சட்டவல்லுனர்கள், வெளிநாட்டு சட்டவல்லுனர்கள் இணைந்து சிங்கள தேசத்திற்கு இடைக்கால வரைபொன்றைத் கொடுத்துள்ள போதிலும், சமாதான முயற்சிகள் முடங்கிய நிலையிலேயே உள்ளன.

எமது பலமான சூழலில்தான் சமாதானம் வந்துள்ளது. நிச்சயமாக எமது பலத்தை ஒன்றுதிரட்டி மாவீரர் கனவினை நனவாக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



## தடைதாண்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஞானப்பிரகாசர் நினைவுநாள் அனுஷ்டிப்பு

சமூக அபிவிருத்திமன்ற ஸ்தாபகர் சண்முகம் ஞானப்பிரகாசரின் 13 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அன்று காலை 10 மணி முதல் இடம்பெற்ற நிகழ்வில் - அமரர் ச.ஞானப்பிரகாசர் தொடர்பான நினைவுரைகளை முன்னாள் யாழ்ப்பாண சமூகசேவை உத்தியோகத்தர் மற்றும் 'சொண்ட்' நிறுவன இயக்குநர் எஸ்.செந்தூர்ராஜா முதலானோர் நிகழ்த்தினர்.

நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ப)

## பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ்.மாவட்டம் கட்டைவேலிப் பிரிவில் செல்லன் - கிட்டிணன், நீலன் - மதுரம் ஆகிய பெற்றோருக்கு 07.01.1984இல் நான் பிறந்தேன். எனது பிறப்புச் சான்றிதழ் பதிவு இலக்கம் 4199 என்பதாகும். 12.03.1984 இல் பதிவுசெய்யப்பட்ட மேற்படி சான்றிதழில் எனது பெயர் கொபுலன் எனப்பதியப்பட்டிருக்கிறது. இப்பெயர் பொருத்தப்பாடுடையதல்லவென நான் கருதுவதால் கண்ணன் என்று எனது பெயரை மாற்றம் செய்கின்றேன் எனவும், 23.11.2003 தொடக்கம் அரச ஆவணங்களிலும் மற்றும் பதிவுகளிலும் கண்ணன் என்ற பெயரையே உபயோகித்து வருவேன் என்பதையும் இத்தால் இலங்கை அரசினர்க்கும் சகல பொதுமக்களுக்கும் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

மானாங்கானை,
வல்வெட்டித்துறை.

கி.கண்ணன்

(531)

இதோ அறிமுகமாகிறது!

"Favourlight"

சர்வதேசரீதியில் சுண்ணாம்பு (கல்சியம்) படிவு நீர் பிரதேசங்களுக்கென தனித்துவமாக இரசாயனவியல் ரீதியாக துணிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் எந்தவித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாத சலவைத்தூள் "Favourlight" யாழ் நகரில் மிகவிரைவில் அறிமுகமாகின்றது.

"ATTALAGAM"
Court Road,
Mallakam.

(532)

## மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்

### பாவித்த வாகனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கான அறிவித்தல்

**வாகன இலக்கம் :- 12 சிறீ 211**
**வாகனத்தின் வகை :- பேர்ஜோ(peugeot) - 504**

மேற்படி வாகனம் 2003.12.10 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

வாகனத்தை 04.12.2003 ஆம், 05.12.2003 ஆம், 09.12.2003 ஆம் திகதிகளில் காலை 10.00 மணியில் இருந்து பி.பகல் 4.00 மணிவரை யாழ் செயலக களஞ்சிய கிளையில் பார்வையிடமுடியும்.

- வாகனத்தை ஏலத்தில் கொள்வனவு செய்பவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட உச்சக்கேள்வி தொகையின் **25%** த்தினை கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
- மிகுதி **75%** பணத்தினை கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளோ அல்லது அதற்கு மறுநாளோ செலுத்தி வாகனத்தை செயலக வளாகத்திற்கு வெளியே எடுத்துச் செல்லல் வேண்டும். தவறும்பட்சத்தில் முதலில் செலுத்திய **25%** கொள்வனவுப் பணம் மீளச்செலுத்தப்படமாட்டாது.
- இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறியவேண்டுமாயின் மேலதிக மாவட்ட செயலாளர் (நிதி) அவர்களுடன் நேரடியாகவோ அல்லது 2222398 இலக்க தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளலாம்.

**செ.பத்மநாதன்**
**அரசாங்க அதிபர்**
**யாழ்ப்பாணம்.**

(சி-1824)

# மாணவர் பேரவை தாக்கப்பட்டமை மிகமோசமான மனிதஉரிமை மீறல்

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவு நேரம் நீதிமன்ற அனுமதியின்றி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துக்குள் புகுந்து மாணவரை அச்சுறுத்தியதுடன், அங்கிருந்த சொத்துக்களையும் நாசம் செய்தமையானது மிகமோசமான மனிதஉரிமைமீறலாகும் என- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் யாழ்.மனிதஉரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த சனிக்கிழமை இரவு திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் - யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த தமிழீழ மாவீரர்தின அலங்கார வளைவை ட்ரக் வண்டியால் இடித்து வீழ்த்தியதுடன் -

அன்று நள்ளிரவு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினுள் புகுந்து அங்குநின்ற மாணவர்களின் தலைமீது கைத்துப்பாக்கியினை வைத்துச் சுடப்போவதாக அச்சுறுத்தியுள்ளார்கள். அங்கிருந்த உடமைகள் பலவும் நாசமாக்கப்பட்டுள்ளன.

இது மிகமோசமான மனிதஉரிமை மீறலாகும். இதற்கான சரியான, நீதியான விசாரணைகள்மூலம் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குச் சரியான தீர்வைப்பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மனித உரிமைகள் அலுவலகத்தின் தலைவர் ரூவான் சந்திரசேகராவிடம் கேட்டபோது,

இது குறித்த விசாரணைகள் விரைவில் நடத்தப்படவிருப்பதாகவும், இராணுவத்தினர், பொலிஸார், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் ஆகியோர் இதற்காக அழைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

திறைஞ்சனாஸ் சங்கானை

சிவாஜி, அர்ஜுன் நடித்த இன்று முதல்

மன்னவரு சின்னவரு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

Get Carder

(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.

லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மின், கபாலி நடித்த

ஆஞ்சநேயா

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-1751)

### நமது ஈழநாடு நடத்திய
### தரம் ஐந்து மாணவர்களின் மாதிரிப் பரீட்சை பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்த புள்ளிகள் |
|---|---|
| **கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதர் வித்தியாலயம்** | |
| 278. பி.பிருந்தாயினி | 110 |
| **யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை** | |
| 279. க.அனுயன் | 138 |
| 280. ஜா.நரேந்திரன் | 117 |
| 281. வ.விதுஷன் | 111 |
| 282. சு.கிருஷ்சாந் | 100 |
| 283. ந.கோபிகா | 104 |
| 284. ந.கேதசன் | 108 |
| **யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்** | |
| 285. வி.ஜனார்த்தனன் | 134 |
| 286. தே.றொசானி | 112 |
| 287. த.சரண்யா | 100 |
| 288. வை.விசாகன் | 110 |
| **கொக்குவில் நாமகள் வித்தியாலயம்** | |
| 289. நா.பிரதாஸ் | 100 |
| **யா/ ஊர்காவ. புனித மரி. பெண்கள் பாடசாலை** | |
| 290. சுதர்சன் குபேன் உசா | 111 |
| **யா/ உடுவில் மகளிர் கல்லூரி** | |
| 291. சி.கிருத்திகா | 101 |
| 292. சாந்தரூபன் | 117 |
| **யா/ இணுவில் மத்திய கல்லூரி** | |
| 293. அ.பிரியங்கா | 107 |
| **யா/ அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை** | |
| 294. இ.சுகன்யா | 102 |
| **யா/ பண்டத்தரிப்பு மகளிர் உ.பா.** | |
| 295. சி.கலாஜினி | 101 |
| **யா/ சென்ற். ஆன்ஸ். றோ.க.த.க. பாடசாலை** | |
| 296. உ.ஜெல்சின் | 123 |
| **யா/ சங்குவேலி அ.த.க.பாடசாலை** | |
| 297. சி.நிடோஜனா | 129 |

(தொடரும்)

# கொள்கலனில் கண்டுபிடிக்கப்பட்ட விமானங்கள்; இரண்டு பிரிவுகளாக நடைபெறும் விசாரணைகள்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து, சுங்கத்திணைக்கள அதிகாரிகளால் இரண்டு சிறிய விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக, இருவேறு குழுக்களாக விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விமானப்படையும், புலனாய்வுப் பிரிவும் தனித்தனியாக இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

கொள்கலன் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோதே, இந்த இரண்டு சிறிய விமானங்களையும்- சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தக் கொள்கலனில் சவர்க்காரம் மற்றும் தொலைக்காட்சி உதிரிப்பாகங்கள் இருப்பதாகவே சுங்க அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொள்கலனில் - மூன்று அதிசக்திவாய்ந்த அன்ரெனாக்களும், 160 திசைகாட்டிகளும், இரவுப்பார்வை சாதனங்களும் இருந்தன.

இந்தச் சாதனங்களை இரகசியமாக இறக்குமதி செய்வதற்கு யார் முயற்சி செய்தார்கள் என ஆராய்நது வருவதாகவும் இவை பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் விசாரணை செய்து வரும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயர்வலு அன்ரனாக்கள், திசைகாட்டிகள், சிறிய விமானங்கள் என்பன - எவரதும் தனிப்பட்ட நோக்கங்களுக்காகக் கொண்டுவரப்பட்டவையல்ல என்றும், இதனால் தாக்குதல் நடத்துவதற்காகவே இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் விசாரணைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தகைய விமானங்களை நாட்டுக்கு இறக்குமதி செய்வதாயின் - சிவில் விமானப் போக்குவரத்துச் சபையிடம் விண்ணப்பித்து, அதிகாரிகள் அந்த விமானத்தைப் பார்வையிட்டு, அது குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆராய்ந்த பின்னரே அனுமதி வழங்கப்படும்.

ஆனால், இந்த விமானங்கள் குறித்து - சிவில் விமானப் போக்குவரத்துச்சபையிடம் எந்தவித விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கவில்லை.



மீட்கப்பட்ட விமானம்

கைப்பற்றப்பட்ட விமானங்களில் ஒன்று செஸ்னா - 46 ரகத்தைச் சேர்ந்தது. இது வியட்னாமில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவது விமானம் ஸ்கைலைன் - 152 ரகத்தைச் சேர்ந்தது. இந்த விமானம் தயாரிக்கப்பட்ட இடம்பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை.

'ரிமோட் கொன்றோல்' மூலமாக இயக்கப்படும் இந்த இரண்டு சிறிய விமானங்களும், இரண்டு முதல் இரண்டரைக் கிலோகிராம் எடையைச் சுமந்து செல்லக்கூடியவை. அத்துடன், 30 நிமிடநேரம் பறக்கக்கூடியவை.

இந்த விமானங்களில் வெடிபொருள் நிரப்பி - பாதுகாப்புமிக்க, முக்கியத்துவம் வாய்ந்த இலக்கு மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்த விமானங்களால்- இரண்டரைக் கிலோ எடையுள்ள வெடிபொருட்களை மட்டுமே தூக்கிச் செல்லக்கூடியதாக இருப்பதால், பெரியளவிலான சேதத்தினை ஏற்படுத்தமுடியாது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விமானங்களுக்கு நவீன கமரா மற்றும் பரிமாற்ற சாதனங்கள் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்த விமானப்படை அதிகாரிகள், இவற்றை - தற்போது விமானப்படையிடம் உள்ள ஆளில்லா வேவுபார்க்கும் விமானங்களைப் போன்று வடிவமைத்துக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தனர்.

இதன்மூலம் இந்த விமானங்களை, உளவு வேலைகளுக்குப் பயன்படுத்தவோ அல்லது புகைப்படங்களை எடுக்கவோ பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

அதனால் - இந்த விமானங்களும், அதிதிறன் வாய்ந்த அன்ரனாக்களும் - வேவு நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தவே இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், தற்போது விசாரணைகளை நடத்திவரும் விமானப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைகளுக்காகவே தாம் காத்திருப்பதாகவும், இதன் பின்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இடமாற்ற உத்தரவால் அதிர்ச்சி

யாழ் குடாநாட்டு இராணுவத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, திடீரென ஜனாதிபதி சந்திரிகாவினால் மத்திய றிசேவ் தொண்டர் படைக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து, மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருந்தாலும் இந்தப் பதவி மாற்றத்தின் மூலம் இவர் இராணுவத்தில் நான்காவதோ அல்லது ஐந்தாவதோ இடத்திற்கு உயர்ந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை மூலம் யாழ் குடாவிலிருந்து மாற்றலாகி கொழும்பை இவர் மட்டும் பாதுகாக்கச் செல்கின்றார். கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இரவு தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த வேளையிலேயே இவருக்கான இந்த இடமாற்ற உத்தரவு கிடைத்தது.

'நான் இந்தப் புதிய பதவியில் மிகுந்த அக்கறையைக் காட்டுவேன். யாழ் குடாநாட்டுக்காக நல்லதைச் செய்வேன்' என, தனது நெருங்கிய நண்பர் ஒருவரிடம் தெரிவித்தார் சரத் பொன்சேகா.

அவர் தனது 'நண்பருக்கு மேலும் தெரிவிக்கையில் - கடந்த இருபது மாத யுத்தநிறுத்த காலத்தில் படையினரை அதிஉஷார் நிலையில் வைத்திருந்ததாகவும், அவர்களுக்குப் பயிற்சி போன்றவற்றை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

இவரது இடமாற்றத்திற்கான உடனடிக்காரணம் - இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனவின் இடமாற்றலாகும்.

அடுத்த வருடம் ஏப்பிரல் முதலாம் திகதி சரத்பொன்சேகா தனது சேவையினை முடித்துக் கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வரவு - செலவுத் திட்டத்தின் நிவாரணங்கள் குறித்த திட்டவரைபு அடுத்தமாதம் பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மக்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படவேண்டிய நிவாரணங்கள் குறித்த திட்டவரைபு, பிரதமர் ரணிலிடம் அடுத்த வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கிற்கான முழுமையான அபிவிருத்திப் பணிகளும் தனது அமைச்சின் கீழேயே கொண்டுவரப்படவேண்டுமெனவும் அவர் பிரதமரிடம் வலியுறுத்தவுள்ளார்.கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் கிழக்கிலும், வன்னியிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அந்தப் பகுதி அமைச்சுக்கள் முன்னெடுத்திருக்கின்றன. ஆனால், வடக்கின் புனரமைப்பு அமைச்சு முன்மாதிரித் திட்டங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம். இதற்கு உரிய நிதி ஒதுக்கப்படுமானால் தமது அமைச்சின் கீழ் இதனைச் செயற்படுத்த முடியுமெனவும் மகேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கின் அபிவிருத்தியைக் காட்டிலும், பாதுகாப்பு அமைச்சுக்கு கூடிய நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதனைத் தம்மால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியுமென அவர் கேள்வி எழுப்பினார்.

(01)

## சிறுகைத்தொழில் முயற்சிக்கு 35 பில்லியன் ரூபா ஒதுக்கீடு!

சிறிய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக அடுத்த ஆண்டிற்கான அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் 35 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதென அமைச்சரும், பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான சி.இ.எவ்.இ. நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக, கொழும்பு தாஜ் ஹோட்டலில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இதற்குப் பரிகாரம் காணும் முகமாக ஆசிய அபிவிருத்தி 66 பில்லியன் அமெரிக்க டொலரை பல வங்கிகளுக்கு அனுப்பியது. ஆனால், இதன்மூலம் பெறப்பட்ட பலன் சந்தோஷமளிப்பதாக இருக்கவில்லை.

எனவே அரசாங்கம் 35 பில்லியன் ரூபாவினை இதற்கு ஒதுக்கியுள்ளதன் மூலம் இந்த சிறுகைத் தொழிலை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதாக அமையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீர்ப் பயன்பாட்டு பிரேரணைக்கு எதிராக ஒரு நாள் வேலைநிறுத்தத்துக்கு வர்த்தக சம்மேளனம் அழைப்பு!

நீர்ப் பயன்பாடு தொடர்பாக, கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வீடமைப்பு அமைச்சரினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக, தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக, நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளை முடக்கி பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக, இலங்கை வர்த்தக சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் - அந்தப் பிரேரணை மூலம், நீர்ப்பயன்பாடானது வர்த்தகமயமாவதுடன், ஏனைய பொருட்களைப் போலவே இதுவும் எழுந்தமானமான விலை அதிகரிப்பை எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடியதாகும்.

எனவே, இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக வர்த்தக சம்மேளனத்தின் முக்கியஸ்தர்களுடன் டிசம்பர் மூன்றாம் திகதி சந்திப்பொன்றினை நடத்தவிருப்பதாக சம்மேளன செயலாளர் பாலா தம்பு தெரிவித்தார்.

ஏற்கனவே, காஸ் மற்றும் ரெலிக்கொம் ஆகியவற்றினை தனியார்மயமாக்கியதன் மூலம் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோலவே இயற்கையாகக் கிடைக்கும் நீரும் அவ்வாறே ஏற்படும். எனவே இது மனித உரிமைப் பிரச்சினையாகும். எனவே, நாடு தழுவியரீதியில் இதற்கான எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் எனவும் சம்மேளன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படை விசேட படையணிக்கு அமெரிக்க அதிகாரிகள் பயிற்சி

### ஒரு மாத காலம் நீடிக்கும்

(கொழும்பு)

கடற்படையின் விசேட படகுப் படையணி (Special Boat Squadron) கொமாண்டோக்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்காக, அமெரிக்க கடற்படை அதிகாரிகள் இருபது பேர் இலங்கை வந்துள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பு வந்த இந்த அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள், இலங்கை கடற்படையினருக்கு விசேட பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

கடற்படை விசேட படகுப் படையணியைச் சேர்ந்த படையினருக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது. விரைவாகவும், நுட்பத்திறனுடனும் கடலிலிருந்து தரையிறக்கத்தை மேற்கொள்வது குறித்தும், எதிரிகளுடனான போர்நுட்பம் குறித்தும் இவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் போர் நடவடிக்கைகளின் போது படையினருக்கு ஏற்படும் காயங்களுக்கான முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குவது பற்றிய பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டம் - ஒரு மாத காலத்துக்கு திருகோணமலைக் கடற்பரப்பிலும், அதனை அண்டிய நிலப் பகுதிகளிலும் இடம்பெறவுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சித் திட்டம் அமெரிக்க - இலங்கை இராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் ஒரு கட்டமாகவே மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஓட்டோக்களின் பேரணியின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

# மாங்குளம் இராணுவமுகாம் வெற்றிக்கு தலைவரின் உறுதியான திட்டமே காரணம்

## மணலாறு கட்டளைத் தளபதி பால்ராஜ்


(யாழ்ப்பாணம்)

வன்னியில் பெரும் தடைக்கல்லாக இருந்த மாங்குளம் இராணுவ முகாம் - தமிழீழத் தேசியத் தலைவரின் உறுதியான திட்டத்தை செயற்படுத்தி, 1990 ஆம் ஆண்டில் தகர்த்து அழிக்கப்பட்டது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மணலாறு கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

மாங்குளம் இராணுவமுகாம் அழிப்பின் 13 ஆவது ஆண்டு நிறைவுவிழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாங்குளம் முகாம் தகர்ப்பில் வீரகாவியமான கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவுக்கல்லினை - மணலாறு கட்டளைத்தளபதி கேணல் பால்ராஜ்"ம், திருவுருவச் சிலையை லெப். கேணல் போர்க்கின் தந்தையாரும் திரைநீக்கம் செய்தார்.

சிறப்புரையினை கேணல் பால்ராஜ் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் தளபதி கேணல் சொர்ணம், கேணல் ஜெயம், பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





அம்டா நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட மட்டுவில் சிறிவேற்பிள்ளை சனசமூகநிலையக் கட்டடத்தை - ஜப்பான் தூதுவராலயத்தைச் சேர்ந்த கியுடெக்கி ஒணிஷி - நாடாவெட்டித்திறந்து வைப்பதையும், பயனாளி ஒருவருக்கு அன்பளிப்புப் பொருள் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு வெளியே இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு நிதியுதவியாக இருபத்தையாயிரம் ரூபா யாழ்.மாவட்டம் முழுவதும் வழங்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டிற்குள்ளே இடம் பெயர்ந்து, வீடுகளை இழந்து பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் பலருக்கு - வீடுகள் புனரமைப்பு நிதியாக ரூபா இருபத்தையாயிரம் ஒதுக்கப்பட்டு, அவை கட்டம் கட்டமாகவும், சிலருக்கு முழுமையாகவும் வழங்கப்பட்டன. பலருக்கு முதற்கட்டப்பணம் மட்டுமே கிடைத்தது. மிகுதி கிடைக்கவில்லை.

முதற்கட்டப் பணம் பெற்றுக் கொண்ட குடும்பங்களின் வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதா? என்பதை அறியும் பொருட்டு, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வீடுகளுக்குச்சென்று பார்வையிட்டு, அறிக்கை தயாரித்து, பூரணப்படுத்தப்பட்ட வீடுகளுக்கான மிகுதிப் பணம் விரைவில் கிடைக்குமென்று உறுதியும் வழங்கிச்சென்றார்கள். ஆயினும், பணம் கிடைத்தபாடில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (13)

## வலயமட்ட பண்ணிசைப் போட்டி

(புன்னாலைக்கட்டுவன்)

தீவகக்கல்வி வலயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வலயமட்ட பண்ணிசைப்போட்டி -

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டமட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களை, உரியநேரத்திற்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர். (83)

## எழுவைதீவு ஆயுர்வேத வைத்தியசாலையின்

# விடுதியில் இருந்த உணவுப்பொருட்கள் விஷமிகளால் நாசம் செய்யப்பட்டுள்ளது

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைத்தீவு பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் மற்றும் உதவியாளரின் விடுதியிலுள்ள உணவுப் பொருட்கள் - விஷமிகளால் நிலத்தில்வீசி நாசம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

வைத்தியரின் உதவியாளர் - இரவு வெளியில் சென்று விட்டு, அதிகாலைவேளை திரும்பி வந்து பார்த்தபோது, அனைத்து பொருட்களும் - சமையல் அறையில் வீசப்பட்டிருந்தாகவும், மண் ணெண்ணை அடுப்பு சேதமாக்கப்பட்ட நிலையில் இருந்தாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அண்மைக் காலத்தில் இங்கிருந்த சமையற் பாத்திரங்கள் சிலவும் திருட்டுப் போயிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்திய சாலை விடுதியில் தங்கியிருந்தே வைத்தியர் மற்றும் உதவியாளர் கடமையாற்றி வருகின்றனர். இந்த விஷமிகளின் செயறபாட்டால் இவர்கள் மனவிரத்தி அடைந்துள்ளனர். (83)

# அம்டா நிறுவனத்தின் நிதி உதவியுடன் மட்டுவில் சனசமூகநிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் அரசாங்கத்தினதும், மக்களினதும் நன்கொடை நிதியுதவியுடன், அந்த நாட்டைச் சேர்ந்த அம்டா அரச சார்பற்ற நிறுவனத்தினூடாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட - மட்டுவில் வடக்கு சிறிவேற்பிள்ளை சனசமூகநிலையக் கட்டடத் திறப்புவிழா - கடந்த புதன்கிழமை நிலையத் தலைவர் க.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலயத்தைச் சேர்ந்த முதற்செயலர் கியுடெக்கி ஒணிஷி, அம்டா நிறுவன சமூக அபிவிருத்தித் திட்ட இலங்கைப் பிரதிநிதியும், திட்டப் பணிப்பாளருமாகிய சிய் யொசிமி, அம்டா நிறுவன யாழ்.வெளிக்களக் காரியாலயத்தைச் சேரந்த திட்டஇணைப்பாளர் கிரோயுக்கி ஒக்காசாக்கி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சிறினிவாசன், சாவகக்சேரி பிரதேச செயலர் பாலச்சந்திரன், விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அம்டா நிறுவனத்தினரால் சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட 14 பயனாளிகளில் ஒருவருக்கு, நீர் இறைக்கும் இயந்திரத்தையும் வழங்கினார். இங்கு இந்த நிறுவனம் 350 இற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மண்வெட்டிகளும் வழங்கவுள்ளது.

இந்த சனசமூக நிலையம் கடந்தகால போரின்போது பெரிதும் பாதிக்கப்பட்டு, உடைந்தநிலையில் காணப்பட்டது. தற்போது இந்த நிலையக்கட்டம் இதற்குரிய கிணறு, மலசலகூடம் என்பன சுமார் 10 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

# சமூகசெயற்பாட்டு நிறுவனத்தினால் விழிப்புணர்வு திட்ட கலந்துரையாடல்

யாழ்.சமூகசெயற்பாட்டு நிறுவனத்தினால், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்படவிருக்கும் விழிப்புணர்வுத் திட்டங்களுக்கான தேவையான தரவுகளையும், தகவல்களையும் பெறும் பொருட்டு, இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு - உதவி அரசாங்க அதிபர் பணிமனையான மாநாட்டு மண்டபத்தில் - விழிப்புணர்வுத் திட்ட முன் ஆய்வுக் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற இருக்கும் கலந்துரையாடலில், அந்தப் பகுதி கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மகளிர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சனசமூகநிலைய நிர்வாக உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் கலந்துகொள்ளவுள்ளன. (44)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்

பெயர் : ச.தாரணி
முகவரி : புதுறோட், காரைநகர்.



நான்காவது அகவையில்



பெயர் : சி.கிருஷாந்
முகவரி : கோயில் லேன், நாவாந்துறை.

ஆறாவது அகவையில்

பெயர் : சூ.பாஜினி
முகவரி : பண்டித்தறை, நெல்லியடி.





பெயர் : ந.ஷாமந்தி
முகவரி : 88/3, திருவையாறு, கிளிநொச்சி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------
முகவரி :------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்




# நீரில் வாழும் எலி



இங்கிலாந்தில் சசெக்ஷ் எனற இடத்தில் - நீரில் வாழும் எலி இனமான "வோல்" மிகவும் வேகமாக அழிந்துகொண்டு செல்லத் தொடங்கியிருந்தது. 2003 ஆம் ஆண்டில் இந்த இனம் முற்றாகவே அழிந்துவிடும் என, இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள் தெரிவித்திருந்தார்கள். இந்த இனத்தை விருததி செய்வதற்கு, சிறிய நீர் ஓடைகளுக்கு அருகில் உயரமாக வளரும் புல் இனமொன்றை, நீர் ஓடைகளுக்கு இரு பக்கத்திலும் வளர்க்கத் தொடங்குகிறார்கள். இதன் மூலம் இந்த எலிகளுக்குப் புகலிடம் ஒன்றை (**Habitat**) உருவாக்கி, விவசாய முயற்சிகளை அதிகரித்தபோது, புற்களை அழிக்கவேண்டி இருந்தது. இதனால், இந்த எலிகள் - தமது புகலிடத்தை இழந்தவுடன், எலிகளை உண்ணும் உயிரினங்கள் (**Tredators**) இவற்றை எளிதில் கண்டுபிடித்துக் கொல்லத்தொடங்கின.

தற்போது மீண்டும் இவற்றுக்கு புகலிடங்கள் அமைக்கப்பட்டதும், இவ்வினம் வேகமாகப் பெருகிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகமாற்றம்



மனித உடலின் உறுப்புக்கள், வேறு ஒரு மனிதனின் உடல் உறுப்புக்களை ஏறக மறுப்பது இயல்பான ஒரு நிகழ்வாகும். இதனால், பல நேரங்களில் மாற்று உறுப்பு பொருத்தப்பட்டவர்கள் மரணமடைய வேண்டிஏற்படுகின்றது.

விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தால், அவற்றிற்கான மருந்துகள் (**ANTI REJECTION DRUGS**) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனால், முகம் மாற்றும் சத்திரசிகிச்சைகள் (**FACE TRANSPLANTS**) சாத்தியமுடையதாகவுள்ளது.

ஆனால், பல வைத்தியர்கள் இந்த வகையான சத்திரசிகிச்சைகளுக்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றார்கள்.

இவ்வகையான சத்திரசிகிச்சைகளை, முதலில் நீதிநெறி தொடர்பான அறிஞர்களினதும், சமய வாதிகளினதும் கருத்துக்களை அறிவதற்கு விவாதிக்கப்பட வேண்டும் என, வைத்தியர்கள் கேட்டுள்ளார்கள்.

முகமாற்றம் என்பது - உளவியல் நிலையையும் பாதிக்கும் ஒரு செயலாகும். மேலும் முக மாற்றம் ஒன்று செய்யப்படும்போது, இறந்த ஒருவரின் முகத்தசைகள், தோல் ஆகியவற்றை இறந்த சில மணித்தியாலங்களில் அகற்றி, முகமாற்றம் செய்யவேண்டியவருக்கு பொருத்த வேண்டியுள்ளது.

இதனால், அம்முகத்திற்குரியவரின் உறவினர்களின் உளவியல் பாதிப்புக்களையும் கருத்தில் எடுக்க வேண்டியுள்ளதாக அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், முகம் ஒரு மனிதனின் அடையாளமாக இருப்பதாலும், ஒருவரின் அடையாளங்களை திருடுவதாகவும் அமையலாம் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

❸

# குரங்கின் மூளை

குரங்குகளின் மூளையை- மனிதனுக்கு ஏற்படும் நரம்பு நோய்களுக்கு பாவிப்பதற்கான பரிசோதனைகள் நடத்துவதற்கு ஆய்வுகூடம் ஒன்றை உருவாக்கு வதற்கு கேம்பிரிஜ் சர்வகலாசாலை தீர்மானித்திருந் தது. இதன்மூலம், மனிதன் முதுமையடையும்போது, ஏற்படும் மூளை தொடர்பான நோய்களை ஆய்வுசெய்வதற்கு திட்டமிட்டிருந்தார்கள். ஆனால், மிருகவதை தடுப்பு அமைப்புகள் - இந்த ஆய்விற்கு தனது பலமான எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தது. ஆரம்பகாலத்தில்- எலி, தவளை போன்ற விலங்குகளை பரிசோதனைக்கு பாவித்து வந்தார்கள்.



ஆனால், மனிதனுக்கு ஏற்படும் சிலநோய்களுக்கு, மனிதனுக்கு ஈடான ஒரு விலங்கின் மூலமே பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டும் எனவும், மனிதர்களில் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்கு இந்த விலங்குகளை ஆராய்ச்சிக்கு பாவிப்பது தவிர்க்கமுடியாதது எனவும் தெரிவிக்கப்பட்டது.

# அந்த மர்மம்?



றேப் (**RAPE**) எனப்படும் ஒருவகை தாவரம் -அதன் எண்ணெய் வித்திற்காகவும், மருத்துவ மூலிகைப் பண்புகளுக்காகவும் பயிரிடப்பட்டு வருகின்றது. மாாிகாலத்தில் இவை செழித்து வளரும். ஆனால், ஒரு ஆண்டு கடும வரட்சி ஏற்பட்டபோது, இவற்றின் வளர்ச்சி குறைந்திருந்தது. தீடீரென ஒரு குறிப்பிட்ட இனப்பறவைகளும், பூச்சிகளும் மரணமடையத் தொடங்கின. இவற்றுக்கான காரணத்தை ஆராய்ந்தபோது, சில பறவையினங்கள் - பிரதான உணவாக இந்த வகையான றேப் தாவரத்தின் வித்துக்களை தமது பிரதான உணவாக உட்கொள்வது தெரியவந்துள்ளது. மேலும், சில பூச்சி இனங்கள் இந்தத் தாவரத்தின் மகரந்த மணிகளை உண்பதும் தெரியவந்துள்ளது.

# காண்டாமிருகம்

உலகில் உள்ள 5 வகை காண்டாமிருகங்களில் - மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட காண்டாமிருகங்களும் ஒரு வகையாகும். இவ்வின காண்டாமிருகங்கள் - சட்டவிரோதமாக காண்டாமிருகங்களை வேட்டையாடுவோர்களால் (**POACHERS**) அதன் பெறுமதிமிக்க தந்தங்களிற்காக வேட்டையாடப்பட்டு வந்துள்ளன.

இன்று இவ்வின காண்டாமிருகங்கள் அழிவின் விளிம்பிற்கு வந்துள்ளன. இறுதியாக, சுமாத்திராவில் காணப்பட்ட ஏழு காண்டா மிருகங்களைச் சிறைப்படுத்தி, மலேசியாவில் வளர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

உலகில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள காண்டாமிருகத்தை, காப்பாற்றுவதற்கென மலேசியாவில் "சுங்காய்டூசன்" என்ற காண்டாமிருக பாதுகாப்புமையம் அமைக்கப்பட்டிருந்தது.


அண்மையில், அவ்விடத்தில் வைத்திருந்த ஏழு காண்டாமிருகங்களும், "வைரஸ்" நோய்க்கிருமியின் தாக்கத்தால் இறந்து விட்டன.

கிருமிகளின் தாக்கத்தினால் ஏற்பட்ட "நிமோனியா" நோயால் இறந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். காண்டாமிருகங்கள்- இயற்கையில் பரந்து வாழ்வதாகவும், குறுகிய பிரதேசத்தில் அவற்றை வளர்க்க முற்பட்டதே அவற்றின் மரணத்திற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்போது அந்த நிலையத்தை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அழியும்



உலகில் அழிந்துபோகும் நிலையில் மேலும் 2000 தாவரங்களும், விலங்குகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

சில பிரதேசங்களில் தாவரங்களும், விலங்குகளும் - அந்தப் பிரதேசங்களில், புதியதாக ஆக்கிரமித்துள்ள இனங்களினால், அழிவிற்குத் தள்ளப்பட்டுள்ளன. சிசிலி, கலப்பாகோஷ் ஆகிய நாடுகள் - இந்த நிகழ்வுகளுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

மனிதனின் செயற்பாடுகளே, பல விலங்குகளின் அழிவிற்கு காரணமாக அமைந்துள்ளது. 'அரேபியன் ஒறிக், வெள்ளைக் காண்டாமிருகம்' ஆனது இன்று பூமியில் இருந்து முற்றாகவே அழிந்துள்ளது.

காட்டுப் பிரதேசங்களை மனிதர்கள் ஆக்கிரமிப்பதும், தாவரங்களை உணவாகக் கொள்ளும் மிருகங்களும் பல விலங்குகளுக்கு வாழ்விடத்தை இல்லாமற் செய்துள்ளன.

கடல்வாழ் உயிரினங்கள் பலவும், இவ்வகையான அழிவிற்கு உட்பட்டுள்ளன. கூடுதலாக மீன்களைப் பிடிப்பதும், அணைக்கட்டுக்களை உருவாக்கி, அவற்றின்மூலம் மீன் வகைகளின் இடப்பெயர்வுகளை கட்டுப்படுத்தியும், அவை அழிந்துபோக வழிவகுத்துள்ளன.

சில விலங்குகளை உட்கொள்ளும் விலங்குகளாலும், சில இனங்கள் அழிந்துபோயுள்ளன.

இந்தோனேஷியா, இந்தியா, பிரேசில், சீனா ஆகிய நாடுகளில் பல விலங்குகளும், பறவைகளும் அழிவின் நிலைக்கு உட்பட்டுள்ளன. அதேநேரத்தில் -மலேசியா, இந்தோனேஷியா, பிரேசில், இலங்கை ஆகிய நாடுகளில் பல அரிய தாவர இனங்கள் அழிந்துகொண்டு செல்கின்றன.

# தாவரம் + விலங்கு

# எண்ணெய் அகழ்வு



ஆட்டிக் பிரதேசத்தில் காணப்படும் லொபொரென் தீவுகளில் - கடலுக்குள் எண்ணெய் அகழ்வுகளை நடத்தவும், எண்ணெயை எடுத்துக்கொள்ளவும் - இயற்கையைப் பேணும் உலக நிதியம் (WWF) தடைசெய்துள்ளது.

திமிங்கலங்கள் - காட்டு மிருகங்களுக்கு இவை ஆபத்தை ஏற்படுத்துவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தக் கடல் பிரதேசத்திற்கு அருகில், நோர்வே அமைந்துள்ளதால், அந்நாடு இந்தக் கடல் பிரதேசத்தில் எண்ணெய் வள ஆய்வுகளையோ, எண்ணெய் அகழ்வதையோ ஆதரவளிக்கக்கூடாதென, உலக இயற்கை வள பாதுகாப்பு அமைப்பு கேட்டுள்ளது.

லொப்ரென் தீவுகள் - நோர்வேயின் வட மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

உலகத்தில் மிகக்கூடியளவில் தகரத்தில் அடைக்கப்படும் மீன்களான கொட் (COD), கேரிங் (HERRING) ஆகிய மீனினங்கள் காணப்படுகின்றன.


திமிங்கலங்களும், கடற்பறவைகளும் இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. உலகில் மிகவும் குளிரான கடலும் இதுவாகும். எண்ணெய் ஆய்வுகளின்போது, கடலின் அடிப்பாகத்தில், எண்ணெய்ப் படிவங்களைக் கண்டு பிடிப்பதற்கென, சீஸ்மி ஆய்த (SEISMIE SURVEY) எனப்படும் நில அதிர்வுகளை உருவாக்கி மேற்கொள்ளும் ஆய்வுகள், அப்பிரதேசத்தில் வாழும் கடல்வாழ் உயிரினங்களின் உயிருக்கு பேராபத்தை உண்டாக்குவதாக உயிரியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

எண்ணெய் கடல் மட்டத்தில் சிந்துவதால், மீனினங்களில் முட்டைகளைச் செயலிழக்கச் செய்கின்றது. இதனால், மீன் குஞ்சுகள் உ'ருவாகமுடியாதநிலை ஏற்படுகின்றது.

# திரை விமர்சனம்

# குறும்பு

"Boys" படத்தின் இரண்டாம் பாகம்போல எடுக்கப்பட்டிருக்கின்ற இந்தப் படத்தில், மெல்லி தாக எடுக்கப்பட்டுள்ள சில காதல் காட்சிகள் மட்டும் மனதைக கொள்ளைகொள்கின்றன. ஒரே அப்பார்ட்மெண்டில் குடியிருக்கும் நரேஷ், நிகிதா ஆகியோர் நண்பர்கள். இருவருக்கும் பொல்லாத பருவ வயது. அதேவேளையில், நரேஷ் இருக்கும் எதிர்வீட்டுக்குக் குடிவருகின்றார் தியா. நரேஷ்-தியாவின் மேல் காதல் கொள்கின்றார். நரேஷ்



எழுதும் காதல் கடிதங்களைத் திருத்தி, தியாவிடம் சேர்ப்பது நிகிதா. தியா - நரேஷை விரும்புகிறார், அதேவேளை, நிகிதாவும் நரேஷை விரும்புகின்றார்.

ஆனால், நிகிதா வெளிக்காட்டாமல் உள்ளுக்குள் அழுகின்றார். முடிவில் யார் காதல் வென்றது? இதுதான் குறும்புச்சாறு. புதுமுகம் நரேஷ் - தனுஷ் உடைய போட்டோக்கொப்பி. அப்படியே அவரை உரித்துவைத்துக்கொண்டு குறும்புகள் பல செய்கின்றார். நாசர், நிரோஷா போன்ற மூத்த நட்சத்திரங்களும் நடித்திருக்கிறார்கள். பாடலாசிரியர்களுடைய பாடல்களையெல்லாம் - தனது அதிரடி (இடி) இசையால் மழுங்கடிக்கச் செய்திருக்கிறார் யுவன்சங்கர்ராஜா. அப்பா கோபிக்கப்போகிறார். குறும்பு-இளசுகளுக்கு மட்டுமான கரும்பு.

சுதர்ஷி

# அழியும் திமிங்கலங்கள்

கடல் ஆமைகள், சுறாக்கள், டொல்பின் ஆகிய கடல்வாழ் உயிரினங்கள் பல - ஆழ் கடலில் மீன்பிடிக்கும் கப்பல்களினால் அழிவுக்குள்ளாகி வருகின்றன. இந்தக் கப்பல்கள் ட்றிப்நெற் (Driftnets) எனப்படும் கடல்நீர் மட்டத்தின்கீழ் தொங்கிக்கொண்டிருக்கும் வலைகளில் சிக்கி மரணமடைகின்றன. சில கடல் பிரதேசத்தில் சிறுகுறிப்பிட்ட மீன் கடல் ஆமை இனங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன.

இந்த வகையான மீன்பிடி வலையைத் தடைசெய்யுமாறு ஐரோப்பிய யுனியனைச் சார்ந்த நாடுகளை - உலக உயினங்கள் பாது காப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.



அல்போறன் கடற்பகுதிகளில் மொரோக்கோ நாட்டைச் சேரந்த மீன்பிடி இழுவைக் கப்பல்கள் "ட்றிப்நெற்" வகையான வலைகளையே பாவித்து வருகின்றன. 2002 ஆம் ஆண்டு தை மாதத்தில் இருந்து, ஐரோப்பிய யூனியன் நாடுகள் - இவ்வகையான வலைகளைத் தடைசெய்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை 10 ஆண்டுகளுக்குமுன் இந்த வலையைத் தடுப்பதற்குச் சட்டங்கள் தயாரித்திருந்தது.

மேலும் இந்த வலைகள் - சிலவேளைகளில் 4.75 மைல்கள் நீளம் கொண்டனவாகவும் அமைந்திருக்கும். இந்த வலைகள் மிகவும் அரிதாகக் காணப்படும் ஒரு வகையான கடல் ஆமைகளை அழிவுக்குக் கொண்டுசென்றுள்ளன.

# ★ எரிகற்கள் ★




250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்கள் எல்லாம் அழிந்து போனதாக ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளது. இவற்றிற்குக் காரணம் - எரிகற்கள் பூமியில் மோதியது எனத்தெரிவிக்கப்பட்டது. எரிகற்கள் (ASTEROID) சில வேளைகளில் வானமண்டலத்திலிருந்து எரிந்து, கற்களாகிப் பூமியை அடைவதற்கு, பூமியின் துருவப்பகுதியான அத்திலாந்திக்கில் அண்மையில் நியூயோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் விஞ்ஞானியான அகியா பாசு - எரிகற்கள் சிலவற்றை ஆராய்ந்தபோது, அதன் காலப்பகுதி 251 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பது தெரியவந்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் 90% நீர்வாழ் இனங்களும், 70% நிலத்தில் வாழ்கின்ற உயிரினங்களும் அழிந்துபோய்விட்டதை அவராலும், அவரது குழுவினராலும் அறிந்துகொள்ளமுடிந்தது. புவியியலாளர்கள் - இந்தக் காலப்பகுதியைப் பெர்மியம் ாிசாயிக் ( (PERMIAN TRIASSIC) எனக குறிப்பிட்டுள்ளார்கள். மேலும், இவரகள் ஆராய்ந்த பாறைகளுக்கு இடையே சிக்கியிருந்த வாயுக்களை ஆராய்ந்தபோது, காபன் அணுக்களுக்குள் கீலியம், ஆகன் ஆகிய வாயுக்களின் ஐசேற்ரோப் காணப்பட்டது. ஐசோற்ரோப் என்பது - வெவ்வேறு இலத்திரன், புரோத்திரன் எண்ணிக்கையை அணு ஒன்று கொண்டிருப்பதைக் குறிப்பிடுகின்றது. இதேநேரத்தில், நிலத்தில் காணப்பட்ட படிமங்கள் (FOSSIL) - சில உயிரினங்களும் உயிர்வாழ்ந்துள்ளதை அவர்களால் அறியக்கூடியதாக இருந்தது. பல்லி போன்ற ஒரு உயிரினம் வாழ்ந்திருப்பதை அவர்களால் அவதானிக்கமுடிந்தது.

# வாரம் ஒரு யோகாசனம்

# நாகாசனம்

புஜங்காசனம்போல், புஜங்காசனத்தில் 6 அடி விரிப்பை விரித்து, முகங்குப்புறப் படுத்துக் கொண்டு, கைகளை மடக்கி, உள்ளங்கைகள் நிலத்தில் படியும் படி நீட்டி, கால் பாதங்களை ஒரு அடி அகட்டி, கால் பாதங்களைப் படிய வைக்கவேண்டும். படுத்துக்கொண்டு, பின்பு பாம்பு படம் எடுப்பது போல எழும்பி, பிற்பகுதிக்குத் தலையை வளைக்கவேண்டும். பின் இரு கால் பாதங்களையும் வளைத்து, தலை நடுப்பகுதியில் இரு பாதங்களும் முட்ட வேண்டும். இப்படி வளைத்து முட்டும்போது,



சீரான மூச்சை உள்ளிழுக்கவேண்டும். தரைக்கு வரும்போது, மூச்சை வெளிவிடவேண்டும். நன்றாக வளைக்கும்போது - கழுத்து, தோள்ப் பகுதியில் சிறியவலி ஏற்படும். பிற்கால் முட்டிப்பகுதியில் சிறு நரம்புப் பிடிப்பு, வலி இருக்கும். ஆரம்பத்தில் சரியான கஷ்டங்கள் ஏற்படும். இந்தப் பயிற்சியை விடாமுயற்சியுடன் தொடர்ந்து செய்து வருதல்வேண்டும். நாளடைவில் வலி, பிடிப்பு நீங்கிவிடும். சாதாரண நிலைக்கு உடல் வளைந்துகொடுக்கும். கால் பாதங்களும், தலை நடுப்பகுதியும் இரண்டும் சேர்ந்து முட்டும்போது, பாம்பு படம் எடுத்து பறப்பதுபோல் காட்சியளிக்கும். ஆரம்பத்தில் நான்கு தடவைகள் செய்தால் போதுமானது. பின்பு படிப்படியாக நாளடைவில் 14 தடவைகள் செய்தல்வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்தவர்கள் - வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுச் செய்தல்வேண்டும்.

## பயன்கள்

காசநோய், ஆஸ்த்துமா, என்புருக்கி, நீரிழிவு, இருதயப் பலவீனம், வயிற்றுக்கோளாறு, சிறுநீர்க்கோளாறு, மலட்டுத்தன்மை, வயிற்றுவலி, அஜீரணம், தலைவலி, மூலக்கடுப்பு, முதுகுவலி, இடுப்புவலி, நரம்புப் பலவீனம், பித்தவியாதி, பசியின்மை, வாதம், பெண்களுக்கு - மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். மலேரியாக் கட்டி, சுரம், இரத்தச்சோகை முதலிய நோய்கள் உடலைவிட்டு நீங்கும்.

இந்த ஆசனம் பெண்களுக்கு அருமருந்தாகும். ஊளைச் சதைகள் கரையும், இடுப்பு இறுகும், வெள்ளைபடுதல் நீங்கும், இளமைத் தோற்றத்தைக் கொடுக்கும், சுகப்பிரசவம் உண்டாகும், பால் சுரக்கும்.

தருபவர் - மா.மகாநேசன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி*
*மறைந்துஒழுகு மாந்தர் பலர்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# பேரினவாத சக்திகளின் ஆற்றாமையின் சீற்றம்!

இன்றையதினம் கொழும்புக்கு விஜயம் செய்யும் ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பற்றன் அவர்களின் வருகையானது தற்போது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது.

சிறிலங்காவின் அழைப்பினை ஏற்றே அவர் இங்கு வருகை தரவுள்ளார் என்று கூறப்படும் கிறிஸ்பற்றன் அவர்கள் நாளை காலை வன்னிசென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை, நேரில் சந்தித்துப் பேச ஏற்பாடாகியுள்ளது என்றும் வெளியான செய்தியையடுத்தே சர்ச்சை உருவாகியுள்ளது.

நாளையதினம் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 49 ஆவது பிறந்ததினம் என்பதும், ஒரு இணைச்சம்பவமாக நிகழ்வானது பேரினவாதிகளினதும் சில இனவாதம் கக்கும் ஊடகங்களினதும் பார்வையில் வேறுவிதமாகப்பட, கிறிஸ்பற்றன் அவர்களின் வருகையும் அதனோடு இணைத்துப் பிரசாரம் செய்வதுடன், அவரை நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்றும் கூச்சல் போடத்தொடங்கியுள்ளனர்.

இனவாதிகளினதும், அவர்களுக்குத் தாளம்போட்டு, அவர்களின் வெறிக்கூத்துகளுக்கு 'கலை'யேற்றிவரும் ஊடகங்களினதும், அவற்றிற்கு பின்புலமாக இயங்கும், நாட்டில் குழப்பத்தைத் தூண்டி அதில் தமது சுயஅரசியல் இலாபங்களை எட்டமுனையும், தீய உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளினதும் செயற்பாடுகள் அனைத்தும் சிறிலங்காவில் அமைதியும் சமாதானமும் நிலவுவதையும், இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிலையான ஒரு அரசியல்தீர்வு எட்டப்படுவதையும் முற்றாகவிரும்பவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

அண்மைக்காலங்களில் சர்வதேசத்தின் விரிந்த மற்றும் கூரிய பார்வையானது, வன்னி மண்ணையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்த யதார்த்த நிலையையும் நோக்கிக் குவிமையம் கொண்டு வருவதானது, சிறிலங்காவினதும் அதனை அடுத்தடுத்து ஆண்ட அரசாங்கங்களினதும் இனவெறிப்போக்கினையும், தமிழ் மக்களுக்கெதிரான இனஒடுக்குமுறைகளின் பரிமாணங்களையும் அவர்களுக்குத் தெளிவாக உணர்ந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

அதுவும் போர்நிறுத்தத்தையடுத்து உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னணியில் சர்வதேச சமூகத்தின் ஆதரவானது வலுவான சக்தியாக நின்று, சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்குப் பக்கபலமாக விளங்கியதையடுத்து, விடுதலைப் புலிகளுக்கும் அவர்களுக்குமான புரிந்துணர்வுகளும் மிகவும் நெருக்கமானதைத் தொடர்ந்து சிறிலங்காவின் அரசியல் யதார்த்தம் அவர்களுக்குத் தெளிவாகப் புரியத் தொடங்கியது.

இது பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளால் பொறுத்துக்கொள்ளமுடியாத, அதேசமயம் தவிர்த்துக்கொள்ளவும் முடியாத ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமாதான நகர்வுகளின் ஒவ்வொரு கட்டத்தின்போதும், பிரச்சினைகளின் நிஜமுகப் பிரதிபலிப்புகளை இனங்காணத் தொடங்கிய உலகநாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கைக்கு கடனுதவி வழங்கும் நாடுகளின் ஆய்வாளர்கள் என அனைவரும் வன்னிநோக்கி தமது பயணங்களை அடிக்கடி மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதெல்லாம், சிறிலங்காவின் இனப்பிரச்சினை தொடர்பாக, பன்முகப் பரிமாணங்களை அறிந்துகொள்ள நேர்வதுடன், விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேண முயன்றதுடன், அரசுடனும் புலிகளுடனும் நேரடியாகவும், தனித்தனியாகவும், சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டமையானது, சிறிலங்கா அரசுக்கும், பேரினவாத சக்திகளுக்கும் கிடைத்த மோசமான இராஜதந்திரத் தோல்வியாகவும் அமைந்தது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாத நடவடிக்கைகளாகவும், கோடிக்கணக்கில் பணத்தைக்கொட்டி, உலகளாவியரீதியில் பிரசாரம் செய்து, பொய்யை உண்மையாகக் காட்டிவந்த சிறிலங்காவின் பேரினவாதத் தலைமைகளுக்கு இது சகித்துக்கொள்ள முடியாததாகவும் அமைந்துவிட்டது.

குறிப்பாகச் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார வெறியில் நிலைகுலைந்து நாளுக்கொரு மிரட்டலையும், பொழுதுக்கொரு அச்சுறுத்தலையும் அறிக்கையிட்டுவரும் ஜனாதிபதிக்கும், அவரது தோழமைக் கட்சிகளுக்கும், இது பலத்த பேரிடியாக அமைந்தது.

அதன் பிரதிபலிப்பே சமாதான நடவடிக்கைகளில் முக்கிய பணியாற்றிவந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரான நோர்வேயின் பிரதிநிதியை ஜனாதிபதி வெளியேற்றுமாறு நோர்வே அரசிடம் கோரிக்கை விடுத்தமையாகும்.

இதேபோன்று முன்னரும் சில தடவைகள் அரசுக்கு சார்பாக அவர்களது அபிலாஷைகளைப் புறக்கணித்து, நியாயத்தின் பக்கம் குரல்கொடுத்த வெளிநாட்டவர்கள்மீது, பேரினவாதம் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது ஆற்றாமையால் எழுகின்ற சீற்றமேயாகும்.


இந்த வகையிலேயே கிறிஸ் பற்றன் அவர்களுக்கு எதிரான கூக்குரலும் அமைந்துள்ளது எனலாம்.

இதேவேளை, ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடுகளில் ஒன்றான பிரிட்டன், விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள வேளையில், அதே யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் பிரபாகரன் அவர்களைச் சென்று சந்திப்பதை இந்தியத் தூதரக அதிகாரிகள் எதிர்த்துவருவதாகவும் கூறப்படுகிறது.

இது இந்தியாவின் இலங்கை மீதான இராஜதந்திரத் தோல்வியாக கருதவும் கூடும். இந்த நெருக்கடியான சூழலில், நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார் என சந்திரிகாவுக்கு கண்டன எச்சரிக்கையை ஐரோப்பிய நாடாளுமன்றம் தெரிவித்துள்ள செய்தியும் வெளிவந்துள்ளது.

எது எவ்வாறாயினும், உண்மைகளை எவரும் அல்லது எந்த சக்தியும் தற்காலிகமாக மறைக்கலாமேயன்றி நிரந்தரமாகப் புதைத்து ஒழித்துவிடமுடியாது என்பதை பேரினவாதிகளுக்கு வரலாறு உணர்த்தியேதீரும்.

## நாடும் நடப்பும்



செய்தி :- இருபிரதான கட்சிகளையும் இணைக்க முயற்சிக்கின்றேன்.
- சந்திரிகா

# தேசிய அரசாங்கத்தை அமைத்து சிறுபான்மையினரை ஒதுக்கும் நிலைவந்தால் புலிகளுடன் இணைந்து போராட நேரிடும்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகளை ஓரங்கட்டிவிட்டு, தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால், அதற்கு எதிராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்களோடு இணைந்து போராடும் என்று, வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் தலவாக்கலையில் நடைபெற்றது.

இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அவருக்கு மட்டுமே இனப்பிரச்சினையை தீர்க்க முடியும். எனவேதான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்களும் பிரதமருக்கு பூரண ஆதரவை வழங்குகின்றார்கள்.

தம்மை நம்பியவர்களின் முதுகில் ஒருபோதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குத்தியதில்லை. சிறுபான்மைக் கட்சிகளை ஓரங்கட்டும் வகையில் பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்குமானால் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து போராடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மலையக மக்கள் தள்ளப்படலாம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அஹிம்சையைக் கடைபபிடித்து வரும் ஒரு பாரிய தொழிற்சங்கம் என்று குறிபபிட்ட அமைச்சர், மலையக மக்களுக்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்நோக்கும் பலமும் சக்தியும் அதற்கு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# ஆறுமுகநாவலர் பற்றிய வினாடிவினாப் போட்டி!

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் ஆறுமுகநாவலர் பற்றிய வினாடிவினாப் போட்டி டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் மாணவர்கள், ஆசிரியர்கள், சைவப் புலவர்கள், சித்தாந்த பண்டிதர்கள் உட்பட விரும்பிய எவரும் பங்குபற்றலாம். போட்டிகள் மாணவர்களுக்கு வேறாகவும் ஏனையோர்க்கு வேறாகவும் நடைபெறும்.

பங்குபற்ற விரும்புவோர் முழுப்பெயர், பிறந்த திகதி, அஞ்சல் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு - செயலாளர், சைவப் புலவர் சங்கம், 125 அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# இருகட்சிகளும் இணைந்து தேசிய அரசு அமைக்கவேண்டும்

## சர்வதேச நாடுகள் அழுத்தம்

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டுமென, ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இந்தியா உட்பட சில சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்தியுள்ள இதேவேளை, ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான புரிந்துணர்வுடனான செயற்பாடு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு கடந்த இருநாட்களாக இவ்விடயம் குறித்து ஆராய்ந்துள்ளது.

இக்குழுவினர் தமது அறிக்கையினை அடுத்த வாரம் சமர்ப்பித்த பின்னர், ஜனாதிபதியும், பிரதமரும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடிய மருத்துவசேவை நிறுவனத்தால் சத்திர சிகிச்சை உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அரச வைத்தியசாலைகளின் சத்திரசிகிச்சைப் பிரிவுகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களை கனேடிய மருத்துவ நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

ரொரன்டோவிலுள்ள தாவர மருத்துவ சேவை பிரிவு (ஈ.எம்.எஸ்.) என்ற அமைப்பே 30 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருநதுப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட உபகரணங்களில் - சி.ஏ.ரி. ஸ்கானர்கள், நோயாளர்களுக்கான படுக்கைகள், சக்கர நாற்காலிகள், சேலைன் தாங்கிகள், சிறுவர்களுக்கான படுக்கைகள் மற்றும் குளிரூட்டிகளும் அடங்கும்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் மிதிவெடி அகற்றும் நிபுணர்களுக்கான சீருடைத் துணிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கின்றன.

கனேடிய ஈ.எம்.எஸ். நிறுவனம் இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை வவுனியா கூழாங்குளப் பாடசாலையை அமைத்துக் கொடுக்கவும் முன்வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஜோன் வெஸ்பேர்க் இந்தியத் தூதுவராகின்றார்

(புதுடெல்கி)

இலங்கைக்கான முன்னாள் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் இந்தியாவுக்கான நோர்வேத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் 2001 ஆம் ஆண்டு சமாதான முயற்சியினை ஆரம்பித்தவேளையிலிருந்து சமாதான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட இவர், இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டதால் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி இந்தியாவுக்கு அவ்வப்போது அதன் விபரங்களை எடுத்துக்கூறலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# புதிய பொலிஸ்மா அதிபராக இந்திரா டி சில்வா சிபாரிசு!

பதில் பொலிஸ்மா அதிபராக தற்போது கடமையாற்றிவரும் இந்திரா டி சில்வாவை நிரந்தர பொலிஸ்மா அதிபராக நியமிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியல் யாப்பு ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்துள்ளார். எதிர்வரும் வியாழக்கிழமை கூடவுள்ள அரசியல் சிபார்சுக் குழுவுக்கே, ஜனாதிபதி இரண்டாவது தடவையாக இந்தச் சிபார்சை வழங்கியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஏற்கனவே மூன்று சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் தகுதிவாய்ந்த நிலையில் உள்ளதாகவும், இவர்களில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாணடோவை அரசியல்யாப்பு ஆணைக்குழு சிபார்சு செய்த நிலையிலேயே, ஜனாதிபதி இந்திரா டி சில்வாவை சிபார்சு செய்துள்ளார். பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதில் கடந்த ஒனறரை மாதங்களாக இழுபறிப்பட்ட நிலையிலேயே, ஜனாதிபதி இப்போது இவரைச் சிபார்சு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.



# மீண்டும் போர் வெடிக்கும் ஆபத்து; சர்வதேச சமூகம் சமாதானத்தையா, சந்திரிகாவையா ஆதரிக்கும்

தேசிய நல்லிணக்க அரசு என்று ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த 'சந்தர்ப்பவாத' யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு நிராகரித்துவிட்டது.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டிய அவசியம் இப்போது இல்லை என்றும், மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெறுமானால், அதை எதிர்நோக்க அரசு தயாராகவே இருக்கிறதென்றும் முக்கிய அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரணில் அமெரிக்கா சென்றிருந்த சமயம் - சந்திரிகா எடுத்த அதிரடி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, மாற்று அரசொன்றை அமைக்க எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. உலக நாடுகள் அவரது அதிரடி நடவடிக்கையைக் கண்டித்ததால், இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்காகவே சந்திரிகா தேசிய நல்லிணக்க அரசு என்று சந்தர்ப்பத்தைத் திசை திருப்பினார்.

இப்பொழுது அரசியல் ஆதாயம், பதவிமோகம் எதுவுமில்லாத நாட்டுப்பற்று ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதாகப் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக்கொடுக்க எடுத்த முயற்சிகளை, தான் தடுத்துவிட்டதாகவும், அவரது பிரசாரம் அமைகிறது. ஊடகத்துறையைப் பொறுப்பெடுத்ததன் மூலம், தனது பிரசாரத்துக்கு இவற்றை நன்றாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். ஜனாதிபதி சந்திரிகாவின் பிரசாரம் இப்பொழுது அவரை இலங்கையின் ஜனாதிபதி என்ற நிலையிலிருந்து விடுத்து, மூன்றாந்தரப்பு அரசியல்வாதியாகக் காட்சிதர வைத்திருக்கிறது.

1956 ஆம் ஆண்டிலிருந்த அரசியல் நிலைக்கு - இப்போது நாடு பின்னோக்கித் தள்ளப்பட்டு வருகிறது. மொழிவெறியைக் கிளப்பி, சுலபமாக ஆட்சியைப் பிடிப்பதற்குச் சந்திரிகாவின் தகப்பன் பண்டாரநாயக்க வழிவகுத்தார். பின்னர், மொழிவெறி- இனவெறியாக மாறி, ஆட்சிப் பீடத்துக்கு வந்தவர்கள், தமிழ் இன அழிப்பில் ஈடுபட்டனர். இருபது வருட அழிவுகளுக்குப் பின், நாட்டில சமாதானம் தோன்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அது கனிந்துவரும் சூழ்நிலையில், சந்திரிகா அம்மையார் திடீர் நடவடிக்கையால், மீண்டும் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றார்.

மீண்டும் 1956 ஆம் ஆண்டுபோல, இனவெறிப் பிரசாரத்தையும், இனவெறி நடவடிக்கைகளிலும் புத்த பிக்குகள் ஈடுபடத்தொடங்கியுள்ளனர். சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகிய அரசியல் கட்சிகள்- இனவெறிப் பிரசாரத்தையும் 'திவயின', 'த ஐலண்ட்' போன்ற பத்திரிகைகள் இனத்துவேசத்தையும் கக்கிக்கொண்டிருக்கின்றன. இன்று மேலதிகமாக வானொலிகளும், தொலைக்காட்சிகளும் இப்பணியைச் செய்துகொண்டிருக்கின்றன.

இந்த இனவெறிப் பிரசாரத்தில் இப்போது ஈடுபடுபவர்கள்தான், புதிதாக உள்ளனரேயொழிய பிரசார முறைகள் எல்லாம், 1956 ஆம் ஆண்டிலிருந்தவைதான்.

இலங்கை நாட்டில் மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுவிட்டதாகப், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கூறியிருக்கின்றார்.

இனிச் சமாதானத்துக்காகக் குரல் கொடுத்த சர்வதேச சமூகம், சமாதானத்துக்காகப் பொறுமையுடன் சமாதான முயற்சிகளை எடுத்து, சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குமா? அல்லது ஆயுத வியாபாரத்துக்காகச் சமாதானத்தைக் குழப்பும் சந்திரிகாவை ஆதரிக்குமா? அயலிலுள்ள இந்தியா - சந்திரிகாவை ஆதரிக்குமா? சமாதானத்தை ஆதரிக்குமா? இதுதான் இன்றுள்ள முக்கியகேள்வி.

தேசிய அரசு என்றும், தேசிய நல்லிணக்க அரசு என்றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அடி எடுத்துக்கொடுக்க, மதபீடாதிபதிகளும், சந்தர்ப்பங்களைப பயன்படுத்திக்கொள்ள முனைபவர்களும் அதைக் "கோஷ்டிகானமாக" இசைத்துக்கொண்டிருந்தனர்.

தேசிய நல்லிணக்க அரசு என்று சந்திரிகா அம்மையார் இப்பொழுது முன்மொழிந்திருக்கும் யோசனையும், ஒருவித அதிகாரப்பரவலாக்கல் தான்!

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் என்று கொண்டுவரப்பட்ட யோசனைகள்பற்றி முடிவு செய்வது ஒரு புறமிருக்கட்டும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பது சந்திரிகாவா? ரணில் விக்கிரமசிங்காவா? என்ற கேள்விகளுக்கு விடை காணப் புதியதொருவழியைத் தேடுவதாகவே சந்திரிகா அம்மையாரின் தேசிய நல்லிணக்க அரசு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

"எனக்குச் சகல அதிகாரங்களும் இருக்கிறது. இதுவரை இருபத்தைந்து சதவிதமான அதிகாரங்களையே பயன்படுத்தியிருக்கின்றேன். அவசியம் வரும்போது, முழு அதிகாரங்களையும் பயன்படுத்துவேன்" என்று, ஜனாதிபதி சந்திரிகா - நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற முறையில் தனக்குள்ள அதிகாரங்கள் பற்றி இடையிடையே சமீபகாலமாக மிரட்டிவந்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா பல்லாண்டுகளாகப் பொறுமையுடன் அரசியலில் தலைமைப்பீடத்துக்காகக் காத்திருந்தபோது, திட்டம் தீட்டிவந்த நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியை, 1977 ஆம் ஆண்டில் ஆட்சிபீடத்துக்குத் தெரிவானதும் நிறைவேற்றினார். இப்பதவிக்கு வந்தபின் "நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்குப் புதிய அரசியலமைப்பு வழங்கியுள்ள அதிகாரங்களின் கீழ் - ஆணைப் பெண்ணாக மாற்றமுடியாதேயொழிய வேறு எதையும் செய்யமுடியும்" என்று சொல்லியிருந்தார்.

2001 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத்தேர்தலில், ரத்தினசிறி விக்கிரமநாயக்காவைப் பிரதம மந்திரியாகக் கொண்டிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியடைந்தது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி, பொதுஜன ஐக்கிய முன்னணியிடமே இருந்தது.

இதனால், நாடாளுமன்றத்தில் தமது ஆட்சியை இழந்த பொதுஜன ஐக்கிய முன்னணியினர் - எப்படியாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட தமது ஜனாதிபதி மூலம், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்குக் குழிதோண்ட வேண்டுமென்று முயற்சிசெய்யத் தொடங்கினர்.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டதென்றும், சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டதென்றும் கூறிவந்ததுடன், விடுதலைப் புலிகளால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தாகி விட்டதென்றும், ரணில் விக்கிரமசிங்க அரசு - பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை என்றும் குற்றஞ்சாட்டத் தொடங்கினர்.

பின்னர், இந்தக் குற்றச்சாட்டை மேலும் விஸ்தீரணமாக்கி, விடுதலைப் புலிகள் திருகோணமலையைத் தாக்கக்கூடிய நிலையிலிருப்பதாகவும், பத்து நிமிடங்களில் கொழும்பைக் கைப்பற்றிவிடக் கூடியதாக இருப்பதாகவும் கூச்சலிட்டனர்.

புலிகளால் - திருகோணமலைக்கு ஆபத்து. அதனால், இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணியினர் ஓலமிட்டனர். இவர்கள் இந்தியாவுக்கும் அடிக்கடி சென்றுவந்தனர். இந்திய வெளியுறவு, பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மட்டுமல்ல, இந்தியப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளும் இங்கு வந்துசென்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான அணியாக இருக்கும் - ஈ.பி.டி.பி, வரதர் அணி, சங்கர்ராஜியின் ஈரோஸ் குழு ஆகியோரையும் இவர்கள் அணைத்துக் கொண்டதுடன், புளொட் சித்தார்த்தனையும் சந்தித்துப்பேசினார். கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவருடனும் இப்படிச் சந்திப்புக்கள் நடைபெற்றன. சில சந்தர்ப்பங்களில் தூதுவரும் சிலரை அழைத்துப் பேசினார்.

விரைவில் ஆட்சிமாற்றம் வரும் என்று சந்திரிகா அம்மையாரின் தம்பியும், அவரின் ஆலோசகருமான அநுரா பண்டாரநாயக்க அடித்துச் சொல்லிவந்தார். மக்கள் முன்னணி என்ற ஜே.வி.பியினரும் ஆட்சிமாற்றம் வருமென்று கூறிவந்தனர். ஆட்சி மாற்றத்துக்காக ஜே.வி.பியினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டும் சேர்வதற்கான பேச்சுவார்த்தைகளும் நடந்தன. ஜனநாயக முறையில் ஆட்சிமாற்றம் வருமென்று ஜனாதிபதி சந்திரிகாவும் சொல்லிவந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியினர் சிலரை வளைத்து, கட்சித் தாவலுக்கான முயற்சிகளும் நடைபெற்று வந்தன. சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் புலிகள் கேட்டதெல்லாவற்றையும் - ரணில் நோர்வேயின் உதவியுடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது, சந்திரிகா அம்மையாருக்கும், பொ.ஜ.முனணியினருக்கும், மட்டுமல்லாது மக்கள் ஐக்கிய முன்னணியினரும் குற்றஞ்சாட்டி வந்தனர். இதேசமயம் சிஹல உறுமயக் கட்சியினரும் இதே குற்றச்சாட்டுக்களை ரணில் அரசுக்கெதிராகச் சுமத்தும் பிரகாரம் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இதே சமயம் நோர்வேயின் அனுசரணையுடன் சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்துவைத்த சமாதான முயற்சியை பிரதமர்ரணில் தொடர்ந்தார். (தொடரும்)

**எஸ்.எம்.ஜீ.**

# தமிழ் - சிங்கள கலைக்கூடலும் சிஹல உறுமயவின் வெறியாட்டமும்

(தொடர்ச்சி...)

சிங்கள தமிழ் கலைக்கூடல் இரண்டாம்நாள் அமர்வுகள் முதல் நாள் நிகழ்விற்கு முற்றிலும் வேறுபாடாக ஆரம்பமாகியது. வடக்கு - கிழக்கைச் சேர்ந்த கலைஞர்களும், படைப்பாளிகளும், பொலிஸாரின் பாதுகாப்புடன் நிகழ்வு நடைபெறும் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மண்டபத்திற்குமுன் கலகம் தடுக்கும் பொலிஸார் ஆயிரக் கணக்கில் விதைக்கப்பட்டிருந்தனர். இந்தக் காட்சிகளைக் காணும்போது இப்படியான நிலையில் சிங்கள - தமிழ் கலைக்கூடலா என்ற கேள்வி இயல்பாகவே தோன்றியது. இரு குழுவினரும் சதாரணமானவர்களல்ல... உறுதியுடனும் உற்சாகத்துடனும் நிகழ்வை ஒழுங்கு செய்தன்ர். மண்டபத்திற்குள சந்தேகத்திற்கிடமான எவரையும் நுழைவதற்கு அனுமதிக்கவில்லை பௌத்த மதகுருமாரைக்கூட சோதனைசெய்தே உட்செல்ல அனுமதித்தனர். இரண்டாம் நாள் நிகழ்வுகள்.

*"உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்*
*உலகத்தாயின் வயிற்று மைந்தர்*
*நசிந்து இனி கிடக்கமாட்டோம்*
*நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்"*

என்ற பாடலை பாடிக்கொண்டு ஆரம்பமாகியது. இந்தப் பாடலை சிங்களத்திலும், தமிழிலும் இணைந்து பாடினார்கள். இதுவே நிகழ்வை உணர்வுபூர்வமாக்கியது. அரங்கினுள் எந்தப் பிரச்சனைகளும் ஏற்படவில்லை.... ஆனால்..., வெளியிலே



சிஹல உறுமய கூச்சலிலும், ஆர்ப்பாட்டத்திலும் குதித்தனர். பொலிஸார் வீதித்தடைகளைப் போட்டு வெளியிலிருந்து ஒருவரும் மண்டபத்தை நெருங்க முடியாதவாறு செயலில் இறங்கினர். சிஹல உறுமயவைத் தடுத்துநிறுத்த வீதியை தடுத்தமையினால், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுபோல காட்சியமைந்திருந்தது. இரண்டாம் நாள் சிஹல உறுமயவில் உள்ள பௌத்த பிக்குளில் பத்து பேர் வந்தார்கள். அவர்களின் கூச்சலும் காதைப் பிளந்தன.

தலதா மாளிகைக்கு குண்டு வைத்தவர்கள் உள்ளே இருக்கின்றனர் வெளியே அனுப்புங்கள் அல்லது எம்மை உள்ளே விடுங்கள் என்பது, பௌத்தம் என்ற மதம் கொண்டமை சிந்தனையாளரின் செவிகளை எட்டியதும் நிலைகுலைந்துதான் போனார்கள். இரண்டாம் நாள் அமர்வுகளும் வெளியே என்ன நடக்கின்றதென்பதே தெரியாமல் அமைதியாக தொடர்ந்தன. நீண்டநேரம் மண்டபத்திற்குள் நுழைவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட சிஹல உறுமயவினர் பொலிஸாரினால் தடுக்கப்பட்டதால், அவர்களின் முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்து வீதியிலேயே கூட்டமொன்றை நடத்தினார்கள். அதில் சிஹல உறுமயவினர் முக்கியமாக புலிகளிற்கு ஒரு வாரத்திற்குள் பாடம் புகட்டுவோம் என்பதேயாகும். இது பற்றி இரு குழுவினரும் பதில் கூறுகையில் பயன் தரக்கூடிய நிகழ்வுகளைத் தடுக்க நினைக்கும் இவர்கள் போன்றவர்களால், எம்மைப் போன்றவர்களை எதுவுமே செய்துவிடமுடியாது என்பதாகும்.

முதல் நாள் நிகழ்வுகளுடன் வெளியில் நடந்த சம்பவங்களே போட்டி போட்டபடி வெளிவந்தன.... இதனால், அரசியல்வாதிகள் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு படையெடுத்தனர். வாசுதேவநாணயக்கார, அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, நாடாளுமன்ற உறுப்பினரும் பௌத்த மதகுருவுமான பத்தேகம சமித்த தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், சுரேஸ் பிரேமச்சந்திரன், ஆகியோர் வந்தமையினைக் காணமுடிந்தது. வெவ்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் வந்து உண்மையில் அமர்வுகளில் என்ன நடக்கின்றதென்பதை புரிந்துகொண்டிருப்பார்கள் என்றே காணமுடிந்தது. குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பௌத்த மத குருவுமான பத்தேகம சமித்த தேரர் வந்து நிலைமைகளை பார்த்துச் சென்றது. அவர்களைப் போன்றவர்களுக்கு சில ஐயப்பாடுகளைத் தீர்த்திருக்கக்கூடும்.

இனி அரங்கினுள் நடைபெற்ற சில உரைகளை வெளிப்படுத்துவது அவசியமாகவே தெரிகின்றது. பேராசிரியர் சுசரித கம்லத் மிகவும் நிதானமாக அவரின் உரையில் கூறினார். தமிழர்கள் சிங்களப் பேரினவாதிகளினால் நீண்ட நாட்களாக கொடுமைக்குள்ளாகியுள்ளனர். அவற்றை சரியான முறையில் உள்வாங்கி தென்னிலங்கைப் படைப்பாளிகள் பணிகளை முன்னெடுக்கவில்லை. குறிப்பாக யாழ்.நூல்நிலைய எரிப்புப் பற்றி தெற்கில் படைப்பொன்று வெளிவரவில்லை. குணதாச அமரசேகர சில படைப்புக்களைத் தந்துள்ளார்.... இதில் முப்பது ஆண்டுகளில் ஐந்து நூல்களை எழுதியபோதும், அவற்றில் சமாதானத்திற்கு எதிரானதாகவும், போரிற்கு ஆதரவாகவுமே கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் போன்றவர்களால் ஜே.வி.பி. போன்றவர்கள் மாக்ஸிச நூல்களை சமயலறைக்கு பின்பாக வைத்துவிட்டு, முதலாளித்துவ அரசியலிற்குள் சிக்குண்டு இன்று தமிழ் குருதி கேட்கின்றனர். சிங்கள - தமிழ் உறவை எவரிற்கும் பயந்து கைவிடத் தேவையில்லை. என்னைப் பொறுத்த வரையில் தமிழருக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எனது இறுதி ஆயுதத்தைப் பயன்படுத்தி என் உயிருள்ள வரை எதிர்ப்பேன் என்றார்.

(தொடரும்......)

**கனகரவி**

# ரஷ்யாவில் மாணவர்கள் விடுதியில் தீவிபத்து; உறக்கத்திலிருந்த 32 மாணவர்கள் கருகிப்பலி!

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கும் விடுதியில் நேற்று அதிகாலை மாணவர்கள் உறங்கிக்கொண்டிருந்தவேளை, தீப்பற்றிக்கொண்டதில் 32 மாணவர்கள் உடல்கருகி மாண்டனர்.

தீச்சுவாலையில் இருந்தும், புகைமூட்டத்தால் ஏற்பட்ட மூச்சுத்திணறலில் இருந்தும் தப்பித்துக்கொள்வதற்காக கட்டத்தின் ஜன்னல்கள் ஊடாக வெளியே பாய்ந்த 139 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்துக்கு மின்சார ஒழுக்கே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து 17 சீன மாணவர்களைக் காணவில்லை எனவும், 30 பேர்வரை தீக்காயங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் சீன செய்திஸ்தாபனம் ஒன்று தெரிவித்தது.




கொல்லப்பட்ட மாணவர்களில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகின்றார்.

கடந்த 10 ஆண்டுகளாக ரஷ்யாவில் தீவிபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும், கட்டடங்களின் தரக்கட்டுப்பாடு பேணப்படாததே இதற்குக் காரணம் எனவும் பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

தீப்பிடித்த கட்டடம் 1960 ஆம் ஆண்டு சோவியத் தலைவர் நிகிற்றா குருசேவின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஹங்கேரிய பிரஜை ஈராக்கில் சுட்டுக்கொலை

ஈராக்கில் ஹங்கேரியப் பிரஜை ஒருவர் அமெரிக்கப் படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் கொல்லப்



பட்டதாக, ஹங்கேரிய வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளிலும் ஈடுபட்டிருந்த ஹங்கேரியப் பிரஜையான பீற்றர் வாக்கா என்பவரே அமெரிக்கப்படையினரின் சூட்டில் பலியானவராவார்.

எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபோதும் அமெரிக்கக் காவலரணை வேகமாகக் கடந்துசென்றதனாலேயே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக, அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஈராக்கில் 300 இற்கு மேற்பட்ட ஹங்கேரிய இராணுவத்தினர் அமெரிக்கப்படையினருடன் இணைந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் போக்குவரத்துக் ஹெலி ஆப்கானில் விழுந்து நொருங்கியது!

## 5 படையினர் பலி, 7 பேர் படுகாயம்



அமெரிக்க இராணுவ ஹெலிகொப்ரர் ஆப்கானிஸ்தானில் உள்ள பாக்ராம் விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொருங்கியதில் அதில் பிரயாணம் செய்த 5 அமெரிக்கப் பண்டயினர் கொல்லப்பட்டனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

ஆப்கானிஸ்தானின் கிராமப் புறப்பகுதிகளில் தலிபான் போராளிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு இந்த விமானத்தளத்தை அமெரிக்கப் படையினர் பாவித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் மலைப்பிரதேசங்களான துரிஷ்தான், குரார் ஆகிய பிரதேசங்களில் அல் - கொய்டா, தலிபான் போராளிகளுக்கு எதிரான மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு இந்த விமானத்தளத்திலிருந்தே ஹெலிகள் புறப்படுவது வழக்கம் எனக் கூறப்படுகிறது.

எம்.எச்.53 என அழைக்கப்படும் இந்த ஹெலிகொப்ரர் - மிகவும் நவீன தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது. 38 படைவீரர்களை ஏற்றிச்செல்லக் கூடியது.

குறைந்த உயரத்தில் பறந்து செல்லும்போது நிலத்தின் ஏற்ற இறங்கங்களுக்கு ஏற்றவாறு பறக்கும் உயரத்தை சடுதியாக மாற்றும் வல்லமையையும் கொண்டுள்ளது.

இந்தக் ஹெலிகொப்ரர் - 3 இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டிருப்பதுடன், பாதுகாப்பான வெளிக்கவசத்தையும் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# பர்மாவில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுவிப்பு!



வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்களால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். நால்வர் நேற்றுமுன்தினமும் ஒருவர் நேற்றும் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் எதிர்க்கட்சித் தலைவி 'ஆங்சான் சூகியின்' ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவி இதுவரை விடுவிக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான தூதுவர் போல் செகிறியோ பர்மாவிற்கு விஜயம்செய்தபோது, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஆனால், தனது அமைப்பைச் சேர்ந்த 35 அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படும்வரை தனது விடுதலை தொடர்பாக எதுவித முயற்சியும் செய்யப்போவதில்லை என, எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகி தெரிவித்துள்ளார்.

# உலக நோக்கு

## எரிவாயு செல்லும் குழாய் மீது ஈராக்கின் வடபகுதியில் தாக்குதல்

ஈராக்கில் எரிவாயு கொண்டு செல்லும் குழாய் ஒன்று தகர்க்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் ஈராக்கின் வடபகுதியில் நடைபெற்றுள்ளது. "கிர்குக்" நகரத்தில் இருந்து 30



கிலோ மீற்றர் வரை இந்த எரிவாயு செல்லும் குழாய் தாக்கப்பட்டதால் உண்டான தீச்சுவாலையைக் காணக்கூடியதாக இருந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதனால், ஈராக்கிலுள்ள மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலையின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை ஈராக்கில் நடைபெற்ற விமானத் தாக்குதலின்பின் - பாக்தாத் விமான நிலையத்திற்கான உள்ளூர் விமானச் சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ராணுவ விமானச் சேவைகள் தொடர்ந்தும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இமாலயமலைப் பகுதியில் திடீரென பனிக்கட்டி அதிகரிப்பு

இமாலய மலைப்பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட பனிக்கட்டி அதிகரிப்பால் - அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களின் வெளியிலுள்ள மக்களுடனான தொடர்புகள் கடந்த 6 நாட்களாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்திலிருந்து விமானம் மூலம் இதுவரை 15 பேர் மீட்கப்பட்டுள்ளனர். 4000 மீற்றர் உயரத்தில் உள்ள ரேராப் எனும் பகுதியிலிருந்து 130 உல்லாசப்பிரயாணிகளும் மீட்கப்பட்டனர்.

# காஷ்மீர் எல்லையில் யுத்தநிறுத்தம் செய்யும் பாகிஸ்தானின் முடிவை இந்தியா வரவேற்பு!



இந்தியாவையும், பாகிஸ்தானையும் பிரிக்கும் எல்லைப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்போவதில்லை என பாகிஸ்தான் தெரிவித்திருக்கும் கருத்துக்கு - இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்குமான எல்லைப் பகுதியில் பனிபடர்ந்த பிரதேசமான இயசென்னில் போர்நிறுத்தத்தைப் பேணப்போவதாக பாகிஸ்தான் அறிவித்திருந்தது. இக்கருத்துக்கே இந்தியா தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இந்தியாவிற்குள் தொடர்ந்தும் முஸ்லிம் தீவிரவாதிகளை அனுப்புவதற்கு முயற்சிக்குமானால் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படமாட்டாது என, இந்தியா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் சப்ருல்லா ஜமாலி பதவியேற்று முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் அவர் உரையாற்றும்போதே - இந்திய எல்லையில் போர்நிறுத்தம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் அங்கு இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே பஸ் பிரயாணங்கள் மேற்கொள்வது தொடர்பான இந்தியா தெரிவித்திருக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்.

1947 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் கிடைத்த பின்னர் காஷ்மீர் பிரதேசத்தை இருநாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. இதுதொடர்பாக இரு இருநாடுகளும் போர் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

## ஊர்சுற்றி எழுதுவது

வரலாற்று நூல்களில் மாவீரன் அலெக்சாண்டரைப் பற்றியும், நெப்போலியனைப் பற்றியும் பாடப் புத்தகங்களில் படித்தவர்கள் தமிழ்ப்பிள்ளைகள்.

சிங்களப் பிள்ளைகளும் இதைப படித்திருப்பார்கள்.

எல்லாளன், துட்டகைமுனு பற்றி பாடப் புத்தகங்களில் தமிழ் மாணவர்கள் படித்ததற்கும், இப்போது கூறப்படும் இவர்களின் வரலாறுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் அலெக்சாண்டர், நெப்போலியன் பற்றி மட்டுமல்ல, அசோகனின் வீரம் பற்றியும் பாடப் புத்தகங்களில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

வீரபாண்டியகட்டபொம்மன் பற்றி ம.பொ.சி எழுதியதை இன்றும் பலரும் வாங்கி வாசித்துப் பெருமைப்படுகின்றனர்.

ஜோன் தங்ஆர்க் என்ற வீரமங்கை பற்றியும் இந்திப் பாடப் புத்தகங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில் சிவகங்கைச் சீமையை ஆண்ட வீரமங்கை வேலுநாச்சியார் பற்றியும் தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

சிவகங்கை மருது சகோதரர்களான பெரியமருது, சின்னமருது ஆகியோரின் வீரவிடுதலைப் போராட்டம் பற்றியும் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

பொன்னர் சங்கர் பற்றியும், வாளுக்குவேலி பற்றியும் கலைஞர் கருணாநிதி ஆராய்ந்து தேடி அவர்கள் நடத்திய வீரப்போராட்டங்கள் பற்றி எழுதினார்.

. இந்த வரலாற்றுக் கதைகள் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சிகளில் நாடகங்களாகவும், படங்களாகவும் ஒளிபரப்பப்பட்டுவந்தன.

ஆனால், வரலாற்றுப் பாடங்களாக பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ள அந்த வீரர்களுக்கு நிகரான வீரர்களையும், வீராங்கனைகளையும் இன்று இலங்கையில் வன்னியில் கண்களால் காணமுடியும்.

வன்னியில் நடந்த மாலதி நினைவு தினத்தில் - வீராங்கனைகள் நடத்திய அணிவகுப்பு மரியாதையைப் பார்த்தவர்கள் இன்னமும் மகிழ்ச்சிகொண்டு ஆச்சரியத்துடன் வர்ணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த சுமார் இரண்டு ஆண்டு காலமாக, போர் ஓய்வு பின்பற்றப்படுகிறது. இதற்கு முன் நடந்த போரில் சம்பந்தப்பட்ட அரச படையினருக்கு இந்த வீரர்கள் வீராங்கனைகள் பற்றி சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

விடுதலைப் புலிவீரர்கள் வீராங்கனைகள் பற்றியும், இவர்களை வெற்றிகரமாக வழிநடத்தும் உலகத்தமிழினத்தின் ஒரே தலைவன் பற்றியும் இலங்கையின் ஊடகங்களுக்குத் தெரியாது. இதேபோல், முப்படைகளிலிருந்தும் தப்பியோடியவர்களுக்குப் பதிலாக புதிதாகப் படைகளில் சேர்ந்தவர்களுக்கும் தெரியாது.

இதனால்தான், மாவீரர்தின நிகழ்வுகளில் இணைந்து நிற்கும் இளைஞர்களிடம் படையினர் சிலர் சொறிந்து பார்க்கிறார்கள்.

மாவீரர்தினம் பற்றி அரச ஊடகங்கள் கண்டபடி விமர்சனம் செய்யக்கூடாது என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இது நல்லதுதான். ஆனால், 'திவயின என்ற சிங்களப் பத்திரிகை சரி மற்றும் அதன் சகோதரப் பத்திரிகையான 'த ஐலன்ட்' என்ற ஆங்கிலத் தினசரியும் சரி உலகத் தமிழ் இனத்தின் தலைவனை மோசமாக எழுதிவருவதைக் கட்டுப்படுத்தமுடியாதா?

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும், அமைதி ஏற்படுத்துவதற்கும் இந்தப் பத்திரிகைகளும், இவற்றைப் போன்றவைகளுமே காரணமாக இருக்கின்றன. கொழும்பில் நடந்த சிங்கள - தமிழ் கலைக்கூடலில் இனக்கலகத்தைத் தூண்டுவதற்கு சிஹல உறுமயவுடன் திவயினவின் ஊழியர்களும் சேர்ந்திருந்தனர் என்பது தெரிந்ததே!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாவீரர் நாள் நினைவாக அமைக்கப்பட்டிருந்த வளைவை அகற்றிய படையினரே அதனை மீளவும் நிர்மாணித்தனர்!

## மன்னார் நகரப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

(மன்னார்)

மாவீரர் நாள் நினைவாகக் கட்டப் பட்டிருந்த அலங்கார வளைவுகளை அகற்றிய படையினரே அதனை மீண்டும் அமைத்த சம்பவம் ஒன்று நேற்று மன்னார் நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்று மன்னார் நகரப் பகுதியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் அமைக்கப்படிருந்த மாவீரர் நினைவு வளைவினை அந்தப் பகுதிக்கு வந்த 10 இற்கு மேற்பட்ட படையினர் அகற்றிக்கொண்டிருந்தனர்.

இதனையடுத்து, அப்பகுதி மக்கள் திரண்டு படையினரைச் சுற்றி வளைத்து அவர்களை வெளியேற விடாது தடுத்ததுடன், அலங்கார வளைவுகளை மீண்டும் அதேயிடத்தில் வைக்குமாறும் கோரினர்.

நிலைமை மோசமடைந்ததையடுத்து, அப்பகுதிக்கு விரைந்த கண்காணிப்புக்குழுவின் தலைவரும், பொலிஸாரும் மக்களிடமிருந்து படையினரை விடுவித்ததுடன் படையினரைக் கொண்டே வளைவை மீண்டும் கட்டவும், சிவப்பு கொடிகளையும், புலிக்கொடிகளையும் கட்டவும் பணித்தனர்.

அத்துடன், கண்காணிப்புக் குழுவினரும், பொலிஸாரும் இதுபோன்ற நடவடிக்கைகள் இனிமேல் நடக்க மாட்டா என உறுதியளிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இனி மேலும் நடைபெறாது எனவும் அதற்குத் தாம் முழுப் பொறுப்பு என்றும் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையேயான மோதல்களைத் தவிர்க்கும் வகையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் செயற்படவேண்டுமெனவும் கண்காணிப்புக்குழுவினர் கோரிக்கை விடுத்தனர். (201)

## நாற்சந்தி

ஐந்தாறு நாள் அடைமழைக்குப் பின்னர் வானம் ஒருவாறு கடந்த இரு நாட்களாக வெளித்திருந்தது.

'ஒருமாதிரி வெளிச்சிட்டுது... ஆனால், பனி தொடங்கீற்றுது.' என்று அங்கலாய்த்தார் மணியத்தார்.

'ஊரில மழையும்... பனியும் ஆனால் அரசியலிலை இன்னமும் தாழமுக்கம் குறையவில்லை.... இப்பவோ, எப்பவோ அடிப்பதற்கு புயல் மையம் கொண்டிருக்கிறது' என்றார் கனகர்.

' ஏன்... இப்ப அடிக்கிறது என்னவாம்.....' என்றார் மணியத்தார்.

'அது மினிச் சூறாவளி....' என்று கூறிய கனகர் - 'வரப்போற புயல் கடுமையாகத் தான் இருக்கும்போர் இருக்கு.... இரு பக்கம் இருந்தும் இடிமுழக்கம் கடுமையாத்தான் கேட்குது' என்றார்.

'சந்திரிகா எட்டடி பாய்ந்தால்...ரணில் பதினாறடி பாய்கிறார்... ஆளுக்காள் பொறிவைத்து வியூகம் அமைக்கிறதில தீவிரமாய்த்தான் இருக்கினம் எண்டு சொல்லுங்கோ' என்றார் மணியத்தார்.

'சந்திரிகா அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணிலை மடக்கப் பாக்கிறா... ரணிலோ சர்வதேச ஆதரவு வலுவைப் பயன்படுத்தி சந்திரிகாவை குழப்பப் பார்க்கிறார்...' எனத் தொடர்ந்தார் கனகர்.

'அப்ப தென்பகுதி அரசியல் சூடு பிடிச்சிருக்கெண்டு சொல்லுங்கோ... அது சரி சந்திரிகாவுக்கும் ஜே.வி.பிக்கும் கூட்டணி அமைப்பதில் ஒரு இணக்கம் வந்திட்டுதுபோல...' என்றார் மணியத்தார்.

'ஒட்டகத்துக்கு கூடாரத்தினுள் இடங்கொடுத்த கதையாத்தான் முடியப் போகுது சந்திரிகா பாடு...' - இது கனகர்.

'ஜே.வி.பியோட கூட்டணி அமைச்சு தேர்தலுக்கு 'ரெடி' பண்ணிக்கொண்டு, ஐக்கிய தேசிய முன்னணியோடு தேசிய அரசுக்கும் அழைப்பு விடுகிறா எல்லே அம்மா...' என்றார் மணியத்தார்.

'ஒன்று ஊரைப் பேய்க்காட்ட... மற்றது உலகத்தை ஏமாற்றா...' என்றார் கனகர்.

'ஊரில மட்டுமல்ல... உலகத்திலையும் ஒருத்தருக்கும் இன்னும் புத்தி வரவில்லை என்று ஜனாதிபதி திடமாக நம்புறா அப்படித்தானே...' என்றார் மணியத்தார்.

'எல்லோருக்கும் பலன் சொன்ன பல்லி கடைசியில கூழ்ப்பானைக் குள்ளை விழுந்து கெட்டதாம்' என்றார் இவர்களின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சாத்திரியார் சதாசிவம்.

-தெருவாசி

## மாவீரர் வாரத்தையொட்டிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி!

### வவுனியாவில் நேற்று நிறைவுற்றது

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் வவுனியாவில் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழர் விளையாட்டு அபிவிருத்திச் சங்க வவுனியா மாவட்ட இணைத் தலைவர் எஸ்.குருநாதர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் இ.எழிலரசனும் (பாப்பா), சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்துகொண்டனர்.

இந்த இறுதிப் போட்டியில் மருதநிலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் மருதநிலா விளையாட்டுக்கழகம் 2:0 என்ற ரீதியில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வாகனச் சாரதி விடுதலையானார்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் அரச அதிபரின் வாகனச் சாரதி வெலிக்கடை நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டு சரியான முறையில் அரச சட்டத்தரணிகளால் நிரூபிக்கப்படாததாலேயே இவர் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைச் சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட உதயன் என அழைக்கப்படும் அ.அந்தோனிதாஸ் என்பவரே நேற்று நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டவராவார்.

## சாதாரணதர மாணவருக்கு கல்வி விளக்கச் செயற்பாடு!

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகிய இரண்டினதும் லியோ கழகங்கள் - மாணவர் கல்வி மேம்பாட்டு செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக அடுத்த மாதம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கல்வி விளக்கச் செயற்பாட்டினை யாழ். எவ்.எம். வானொலியில் நடத்தி வருகின்றன.

நேற்று ஆரம்பமான இந்த விளக்கச் செயற்பாடு, எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறும். தினமும் இரவு 9.30 தொடக்கம் 10.30 வரை நடைபெறும் இந்த கல்விச் செயற்பாட்டில் மாணவர்கள் தமது சந்தேகங்களை தொலைபேசி வாயிலாக கேட்டுக்கொள்ளலாமெனவும், இதன் மறு ஒலிபரப்பு மறுநாள் காலை 8.30 தொடக்கம் 9.30 மணிவரை நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று விஞ்ஞானமும் இன்று கணிதமும், 26 ஆம் திகதி தமிழும், 27 ஆம் திகதி ஆங்கிலமும், 28 ஆம் திகதி சமூகக்கல்வியும், 29 ஆம் திகதி வரலாறும் 30 ஆம் திகதி இலத்திரனியல் ஆகிய பாடங்கள் நடத்தப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## முரசொலி மாறனின் ஈமக்கிரியைகள் நேற்று சென்னையில் நடைபெற்றன!

(சென்னை)

இந்திய மத்திய அமைச்சரும் தி.மு.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான முரசொலிமாறனின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை சென்னையில் முழு அரசமரியாதையுடன் நடைபெற்றன. இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உட்பட பல முக்கிய தலைவர்கள் இந்த இறுதி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அமெரிக்காவில் கடந்த 10 மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்த முரசொலிமாறன் - கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் கடந்த 74 நாட்களாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த வேளையில் நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணியளவில் காலமானார்.

அவரது இறுதி ஊர்வலம் கோபாலபுரத்திலிருந்து ஆரம்பித்து பெசன்ட் நகரில் முழு அரச மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

## புங்குடுதீவில் இன்று ஒளிவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலய வட்டம் நடத்தும் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

மறைக்கல்வி ஆசிரியர் ஜெயமோகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வணபிதா எஸ். இமானுவேல் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## பொலிஸாருக்கு பயிற்சியளிக்க பிரான்ஸ் நிபுணர்குழு கொழும்பு வந்துள்ளது

(கொழும்பு)

பொலிஸாருக்கு விசேட பயிற்சியளிக்க, பிரான்ஸிலிருந்து நிபுணர்கள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

இந்த நிபுணர்குழு உள்ளூர் பொலிஸாருக்கு, குற்றவாளிகளை முற்றுகையிட்டுக் கண்டுபிடிப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்கவிருக்கிறது.

இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ - இந்த நிபுணர்கள் குழு பொலிஸாருக்கு குற்றச் செயல்களுக்கு எதிரான நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு, தடுக்க நடவடிக்கை மேற்கொள்வது குறித்த உத்திகளை அறிமுகப்படுத்துவதுடன், குற்றவாளிகளிடமிருந்து வாக்குமூலத்தைப் பதிவுசெய்வது குறித்தும் விசேட பயிற்சியளிக்க உள்ளது.

அத்துடன், குற்றவாளிகளையும் குற்றங்கள் நடக்கும் மையங்களையும் கண்டுபிடிப்பதற்கான உத்திகள் குறித்தும் பிரான்ஸ் நிபுணர்கள் பயிற்சியளிக்க உள்ளனர் எனத் தெரிவித்தார்.

## உதவித் தேர்தல் ஆணையாளர் காலமானார்

(கொழும்பு)

உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச் செல்வம் நேற்றுக் காலை காலமானார்.

61 வயதான இவர், பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்றுக்காலை 7.30 மணியளவில் இவர் காலமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கரும்புலி நளினின் நினைவுத் தூபி நேற்றுத் திறப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கரும்புலி கப்டன் நளின் நினைவுத்தூபி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை - மூதூரிலுள்ள வெருகல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கரும்புலி கப்டன் நளினின் நினைவுத் தூபியை திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் போராளிகள், பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

### இனந்தெரியாத....

பெற்ற இடங்களுக்கு திருமலை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், பொலிஸ் அதிகாரி கிளமன் பெர்ணான்டோ ஆகியோர் நேற்று அதிகாலை சென்று பார்வையிட்டதுடன், மேலதிக வன்செயல்கள் பரவாமல் தடுக்க கிண்ணியாப் பிரதேசத்திலுள்ள ஆலங்கேணி மற்றும் ஏனைய கிராமங்களுக்கும் மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - மூன்று இடங்களில் நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல்களில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் 12 பேர் காயமடைந்ததாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (04,10)

### தேசிய....

படும்.

இந்த ஒலி, ஒளிபரப்புக்கு கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### தமிழீழ....

களின் விடிவிற்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூரும் வகையில் அனுஷ்டிக்கப்படும். மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் சிவபபு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும், நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டும் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டும், உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

### இந்து சமய....

இயங்கிவந்த இச்சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகங்களையடுத்து - சக்திகிரீவன் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கடந்த சித்திரை மாதம் 25 ஆம் திகதி பணியாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டநிலையில் சக்திகிரீவன் நீதிமன்றில் சரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி நீதிமன்றில் சந்தேகநபர்கள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி ஆஜராகியிருந்தார். (202)

### இத்தாலி செல்ல.....

படகுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதே கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை ஏற்றிச்சென்ற வாகனச் சாரதி தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

கடந்த ஜுலை முதலாம் திகதி தில்கொல்லப் பகுதியில் 260 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். அதே மாதம் 17 ஆம் திகதி திசமகரகம பகுதியில் 118 பேரும், கண்டியில் 114 பேரும் கல்கிசைப் பகுதியில் 174 பேரும் கைதுசெய்யப்பட்டனர். ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வென்னப்புவ பகுதியில் 23 பேரையும், ஓகஸ்ட் 8 ஆம் திகதி கிழக்கு கடற்பரப்பில் வைத்து 5 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.29 | 96.36 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 162.17 | 164.22 |
| 1 யூரோ | 113.12 | 115.14 |
| 1 சுவிஸ் பிராங் | 72.92 | 74.17 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 68.67 | 70.10 |
| 1 ஜப்பானிய யென் | 00.87 | 00.91 |
| 1 சவூதி றியால் | 25 | 31 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.